Registered as a NewsPaper

விலை ரூபா-7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-14




நாதம் -15 திருவள்ளுவர் ஆண்டு- 2035 ஐப்பசி-25 10-11-2004 புதன்கிழமை ஓசை -266

## அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் நேற்று கிளிநொச்சி வந்தடைந்தார்



தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகரும், தத்து வாசிரியருமான அன்ரன்பால சிங்கம் அவர்கள் நேற்றுக் காலை கிளிநொச்சியை வந்த டைந்துள்ளார்.

அதிகாலை 5.00 மணிக்கு லண்டனில் இருந்து விமானம் மூலம் கொழும்பை வந்தடைந்த அன்ரன் பாலசிங்கம் அவர்க ளும், அவரது துணை வியாரான அடேல் பாலசிங்கம் அவர்களும் விசேட உலங்கு வானூர்தி மூலம் நேற்றுக் காலை 10.15 மணிக்கு கிளிநொச்சியை வந்தடைந்தனர்.

கிளிநொச்சியை வந்தடைந்த அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், திருமதி அடேல் பால சிங்கம் ஆகியோரை அரசியல் துறைப் பொறுப்பாளர் சு. ப. தமிழ்ச செல்வன், கடற்புலிகளின் சிறப் புத்தளபதி கேணல் சூசை, தளபதி கேணல் ஜெயம், தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா. நடேசன், நீதி நிர்வாகத்துறைப் பொறுப்பாளர் பரா, கேணல் ரமேஷ், மாலதி படையணி சிறப் புத் தளபதி கேணல் விதுஷா, தமிழீழ மகளிர் அரசியல்துறைப்

(14 ஆம் பக்கம் பார்க்க)

# எரிக்சூல்ஹெய்ம்-கூட்டமைப்பினர் சந்திப்பு

# இடைக்கால நிர்வாகம் குறித்து வலியுறுத்து

## பலதரப்புடனும் கலந்துரையாடல்

(கொழும்பு)

**நோர்வேயின் சிறப்புத்தூதுவர் எரிக்சூல்ஹெய்ம் நேற்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தியுள்ளார். இதன்போது இடைக்கால நிர்வாகசபை குறித்தும் விரைவில் சமாதானப் பேச்சுவார்த் தகளை ஆரம்பிக்க வேண்டும் என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரால் வலியுறுத்தப்பட்டது. இதன்பின்னர் நோர்வே சிறப்புத்தூதுவர் பலதரப்பின ரையும் சந்தித்தார்.**

சமாதானப் பேச்சுவார்த்தைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட வேண் டும் என்றும்,இதற்குச் சிறிலங்கா அரசுமீது அழுத்தம் கொடுக்க வேண்டும் எனவும் கூட்டமைப்பினர் சூல்ஹெய்மிடம் வலியுறுத்தினர்.

நேற்றையதினம் நோர்வே விசேட தூதுவரைச் சந்தித்து பேச்சு நடத் திய பின்னர் பி.பி.சி தமிழோசைக்கு வழங்கிய செவ்வியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன இது குறித்துத் தெரிவிக்கையில்.

(14 ஆம் பக்கம் பார்க்க)

### பிறந்ததினக் கொண்டாட்டத்திற்கு

## களவாக எடுத்த மின்சாரத்தை துண்டிக்க முயன்ற இளைஞர் பலி

(நல்லூர்)

பிறந்த நாள் கொண்டாட்டத் திற்கு களவாக எடுத்த மின்சாரத் தைத் துண்டிக்கமுயன்ற இளைஞர் மின் சாரம்தாக்கி ஸ்தலத்திலேயே மரண மானார்.

இச்சம்வம் நேற்றுக்காலை ஊரெழு மேற்கில் இடம்பெற்றது.

இவ்வாறு மரணமடைந்தவர் இரத்தினசிங்கம் பிரபா (வயது-19) என்பவரே ஆகும். சகோதரனின் பிறந்தநாளையொட்டி இரவுக் கொண்டாட்டத்திற்கு களவாக மின் சாரம் பெற்று வீட்டில் நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன. காலை பெற்ற மின்சாரத்தைத் துண்டிக்க முயன்ற வேளை மின்சாரம் தாக்கி மர ணத் தைத் தழுவிக்கொண்டதாகத் தெரியவருகிறது.

சுன்னாகம் பொலிஸ் நிலைய பொலிசார் விசாரணைகளை மேற்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## லெப்.கேணல் அன்பு நினைவாக மணலாற்றில் சிறப்பு நிகழ்வு

பூநகரி தவளை நடவடிக்கை யில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட முன்னாள் மணலாறு மாவட்ட சிறப்புத் தளபதி லெப்.கேணல் அன்புவின் 11ஆம் ஆண்டு நினைவுநாள் நிகழ்வும் தவளை நடவடிக்கையில் வீரச்சாவடைந்த மாவீரர்களினதும் நினைவு நாள் நிகழ்வு எதிர்வரும் 12.11.2004 மணலாற்றில் அன்பு கலையரங்கில் நடை பெறவுள்ளது முல்லை மாவட்ட

(14 ஆம் பக்கம் பார்க்க)

## அதிகளவு ஊழல் புரியும் அமைப்புகளாக பொலிஸ், நீதித்துறைகள் உள்ளன

### சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க குற்றம் சாட்டுகிறார்

பொலிஸ் மற்றும் நீதித்துறை என்பவற்றில் ஊழல் மோசடிகள் அதிகரித்துச் செல்வதன் காரண மாக நாட்டை முன்னெடுத்துச் செல் வதில் சிக்கல்களை எதிர்நோக்கு வதாக சனாதிபதி சந்திரிகா குமார துங்க தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு அமைச்சில் நேற்று நடைபெற்ற குற்றங்களைத் தடுப் பதற்கான தேசிய ஆலோசனைச் சபையின் விசேட கூட்டத்தில் உரை யாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில், சட்டத்தையும், சமாதானத் தையும் பாதுகாப்பதாகக் கூறப் படும் இரண்டு நிறுவனங்களும்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## ஊர்திகளைப் பயன்படுத்துவோர் கவனத்திற் கொள்ளவும்

(அலுவலக செய்தியாளர்)

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகு திக்குள் ஊர்திக்களைப் பாவனைக்கு உப்படுத்தி வருபவர்கள் பின்வரும் நடைமுறைகளை கைக்கொள் ளும் வண்ணம் மோட்டார் ஊர் திப்பதிவுப்பகுதி போக்குவரத்துக் கண்காணிப்புப்பிரிவினர் வேண்டி யுள்ளனர்.

இதன் பிரகாரம் மேற்படி பகு திக்குள் ஊர்திகளை பயன்படுத் தும் போது ஊர்தியின் முன் பின் பக்கங்களில் ஊர்தி இலக்கம் பொருத்தப்பட்டு இருப்பதுடன். நடப்பு ஆண்டுக்கான வரியட்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## கன்ரர் ரக வாகனம்மோதி குடும்பப் பெண் ஒருவர் பலி

### முரசுமோட்டையில் சம்பவம்



அதிவேகமாகச் சென்ற கன்ரர் ரக வாகனம் சாரதியின் கட்டுப்பாட்டினை மீறியதன் விளை வாக வீதியால் துவிச்சக்கர வண்டியில் பயணித்த குடும்பப் பெண்ணை மோதியதில் குடும்பப்பெண் கன்ரர் வாகனத்தின் அடியில் சிக்குண்டு பலத்த காயங்களுக்குள்ளாகி வைத்தியசாலைக்கு எடுத் துச்செல்லும் வழியில் மரணமானார்.

மேற்படி சம்பவம் நேற்று பிற்பகல் 2.30 மணி யளவில் பரந்தன் முல்லை பிரதான வீதியின் முரசுமோட்டைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

முன்பள்ளியில் கல்வி பயின்றுவந்த பிள்ளை யைக் கூட்டி வரும்பொருட்டு துவிச்சக்கர வண்டியில்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## லெப். கேணல் குணாவின் உருவப்படம் இணைப்பு




தவளைப் பாய்ச்சலில் வீரகாவியமான தென்ம ராட்சி சிறப்புத்தளபதி லெப்.கேணல் குணாவின் வர்ண உருவப்படம் இன்றைய ஈழநாதம் நாளேட் டுடன் இணைக்கப்பட்டுள்ளது.

# தொற்று நோய் பரவும் அபாயம்!

# சுகாதார நடைமுறைகளைக் கடைப்பிடிக்குக

## - தமிழீழ சுகாதார சேவையினர் கோரிக்கை

(உடையார்கட்டு)

தற்போது தொடர்ச்சியாகப் பெய்துவரும் பருவ மழையால் ஏற்படும் தொற்று நோய்களைத் தடுப்பதற்கான முன்னேற்பாடுகள் குறித்து தமிழீழ சுகாதார சேவையினர் (முல்லை) மக்கள் நலனுக்காக நடைமுறைகளைத் தெரியப்படுத்தியுள்ளனர்.

பருவமழை காரணமாக இடம்பெயர்ந்து வசித்து வரும், மக்கள், ஏனைய மக்களிடையே பல தொற்று நோய்கள் தோன்றும் வாய்ப்புக்கள் காணப்படு வதால் சுகாதார நடைமுறை களைப் பேணுமாறு கேட்டுக் கொள்ளப் படுகின்றனர்.

கடும் மழையினால் கிணறுகள், குளங்கள், நீர் நிரம்பி வழிவதால் வெள்ளப்பெருக்கினால் கிணறுகளினுள் வெளி நீர் உட்செல்லும் சந்தர்ப்பம் தோன்றுகிறது.

இதனால் பல நோய்கள் ஏற்படும் ஏதுநிலை காணப்பட்டு நெருப்புக்காய்ச்சல், வயிற் றோட்டம், வாந்திபேதி, செங்கண் மாரி, ஏனைய வைரஸ் காய்ச்சல் போன்றன பரவ வாய்ப்புள்ளது.

இவற்றிலிருந்து எம்மை காத்துக்கொள்ள தண்ணீரை நன்கு கொதிக்கவைத்து பருகுதல்,(தற்சமயம் குளோரின் கிணறுகளுக்கு இடுவது பெரிதும் பலனளிக்காது), வீதியோர வாணிப உணவு வகைகளை உண்பதைத்தவிர்த்தல்,சமைக்க, உணவுபரிமாற, உண்ண, குழந்தைகளுக்கு உணவூட்ட முன்பதாகவும், மலம் கழித்த பின்னர், குழந்தைகள் விளையாடிய பின் கைகளுக்கு சவர்க்காரம் இட்டு நன்கு சுத்தமான நீரில் கழுவுதல், தேங்கும் மழை நீரில் குழந்தைகள் விளையாடாது பார்த்தல், ஒவ்வொரு வேளையும் சூடான உணவுப் பானங்களைப் பாவித்தல், இலையான் மொய்த்த திறந்த நிலையில் உள்ள உணவுகளை உண்பதை முற்றாக நிறுத்தல்,பச்சையாக உண்ணும் உணவுகளை தவிர்த்தல்(கீரை, கரட் சம்பல், மரக்கறி வகைகள்) பாதுகாப்பாக மலம் கழித்தல், சுற்றாடலை எப்போதும் சுத்தமாக வைத்திருத்தல், உணவு, தேநீர், குளிர்பான நிலையங்களில் பணிபுரிவோர் சுகாதார நடைமுறைகளை இறுக்கமாகக் கடைப் பிடிப்பதுடன் நுகர் வோருக்கு கொதித்தாறிய நீரை மட்டும் வழங்கல், நுளம்பு பெருகும் இடங்களை அதாவது சிரட்டை, தகரப் பேணிகள், இளநீர் கோம்பைகள், ரயர் என்பவற்றில் மழை நீர் நில்லாமல் தவிர்ப்பதுடன் அவற்றை புதைத்துவிடுதல் போன்றவற்றைக் கடைப்பிடிக்குமாறு கேட்டுள்ளனர். (19)

## க.பொ.த (சாதாரணதர) பரீட்சை மாணவர்களுக்கான கருத்தமர்வு

கிளிநொச்சி மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியம். கிளி வலயக் கல்விப் பணிமனை ஆகியவற்றின் அனுசரணையுடன் நமது ஈழநாடு பத்திரிகை நிறுவனம் க.பொ.த சாதாரண தர பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான கணிதம்,ஆங்கிலம், விஞ்ஞானமும் தொழில்நுட்பவியலும் ஆகிய பாடங்களுக்கான மாதிரிப் பரீட்சை வழிகாட்டால் கருத்தமர்வு ஒன்றை பின்வரும் இடங்களில்

12.11.2004 காலை 8.30-கணிதம்

13.11.2004 காலை 8.30-ஆங்கிலம்

14.11.2004 காலை 8.30 விஞ்ஞானமும்,தொழில்நுட்பவியலும் நடத்தவுள்ளது. மாணவர்களுக்கான முழுநாள் கருத்தமர்வாக நடைபெறவுள்ளதால் உணவு, தேநீர் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

க.பொ.த சாதாரணதர பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் அனைவரும் அருகிலுள்ள பரீட்சை நிலையத்துக்கு வருகை தந்து பயனடையுமாறு கிளி/மாவட்ட தமிழீழ மாணவர் அமைப்பினர் கேட்டுள்ளனர்.

01.முழங்காவில் ம.வி,02.ஜெயபுரம் அ.த.க.பா,03. பூநகரி ம.வி,04. பளை மத்திய கல்லூரி, 05.தர்மபுரம் ம.வி,06.முருகானந்தா ம.வி,-7. வட்டக்கச்சி ம.வி, 08 இராமநாதபுரம் ம.வி,09அக்கராயன் ம.வி,10. கனகாம்பிகைக்குளம் அ.த.க.பா,11. கனகபுரம் ம.வி, 12. இந்துக் கல்லூரி,13.கிளிநொச்சி ம.வி,14.கிளி/மத்திய கல்லூரி, 15.றெட்பானா பாரதி வித்தியாலயம்.

## அடிப்படை வசதிகள் இன்றி கோணாவில் உபதபாலகம்

கோணாவில் உப தபாலகம் அடிப்படை வசதிகளின்றி இயங்கி வருகின்றது.

கோணாவில், யூனியன்குளம், ஊற்றுப்புலம் ஆகிய பிரதேசங்களுக்கு மேற்படி உப தபாலகமே தபால் விநியோகத்தினை மேற்கொண்டு வருகின்றது. இருந்த போதிலும் நீர்ப்பாசனத் திணைக்களத்திற்குச் சொந்தமான கட்டடத்திலேயே தொடர்ந்து இயங்கி வருகின்றது. இங்கு இரண்டு தபாலகர் தேவையான போதும் ஒருவர் மட்டுமே தற்போது சேவையில உள்ளார். இப்பிரதேசங்களில் நாநூறுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

### எம்.ஜி.ஆர் முன்னேற்றக்கழகத்தால்

## மாவீரர்தின நிகழ்வுகளை சிறப்புற நடத்த ஏற்பாடு

(அலுவலக செய்தியாளர்)

யாழ். மாவட்ட பண்டத்தரிப்பு பிரதேச எம்.ஜி ஆர் முன்னேற்றக் கழகத்தினரால் மாவீரர் தின மூன்று நாட்களும் மிக எழுச்சியுடன் அனுஷ்டிப்பதற்கான நடவடிக்கையினை மேற்கொண்டு வருகின்றனர்.

பண்டத்தரிப்பு சாந்தைகாவேரி பொது மைதானத்தில் மாவீரர் நினைவுப் பந்தல் அமைக்கப்பெற்று 25,26,27 ஆகிய நாட்கள் மிக எழுச்சிபூர்வமாக அனுஷ்டிக்கப்பெறவுள்ளதென தமிழீழ எம்.ஜி.ஆர் முன்னேற்றக் கழகத் தலைவர் தெரிவித்துள்ளார். (சோ)

## மீண்டும் பொறுப்பேற்றார்

முல்லை மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தனது புலமைப்பரிசில் கல்விச் சுற்றுக் கடமை விடுப்பை வெளிநாட்டில் முடித்துக்கொண்டு 01.11.2004 அன்று மாவட்டம் திரும்பி தனது கடமைகளை மீண்டும் பொறுப்பேற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (20)


## வரிவிளம்பரம்

### தவறிவிட்டது

சிவசுப்பிரமணியம் ஞானாகரன் என்பவரது சாரதி அனுமதிப் பத்திரம் கடந்த வாரம் புளியங்குளம் சோதனைச் சாவடிக்கும் கிளிநொச்சிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனை கிளிநொச்சியில் ஒப்படைக்கவும். தகவல் ஞானாகரன். (5260)


## வவுனிக்குள குளக்கட்டின் மீது ஊர்திகள் பயணிப்பதைத் தவிர்க்குக

அண்மைக்காலமாக வவுனிக்குளத்தில் கரைப்பகுதிகள் வெடித்தும் உடைந்தும் உள்ளது. தற்போது பெய்துவரும் மழையினால் குளத்தின் நீர்மட்டம் உயர்ந்து வருகின்றது. குளக்கட்டின் பாதுகாப்புக் கருதி குளக்கட்டின் மீது செல்கின்ற பாரவூர்திகள் ஏனைய வாகனங்களின் போக்குவரத்துக்களைத் தவிர்த்துக்கொள்ளுமாறு வவுனிக்குளம் நீர்ப்பாசனப் பொறியியலாளர் எந்திரி வ.தவக்குமார் தெரிவிக்கின்றார். (24)

## வவுனிக்குள நீர்ப்பாசனத் திணைக்கள குளங்களின் நீர்மட்டம் உயர்வு

அண்மையில் பெய்த பலத்த மழையினால் வவுனிக்குளம் நீர்ப்பாசனத் திணைக்களத்திற்குட்பட்ட குளங்களின் நீர் மட்டம் 06.11.2004 வரை உயர்ந்துள்ளது. வவுனிக்குளம்2அடி 7அங்குலம், மருதங்குளம் 8அடி 6அங்குலம், (ஒரு அங்குலம் வான்பாய்கின்றது) முறிகண்டிக் குளம் 9அடி (ஒரு அங்குலம் வான்பாய்கின்றது) தேராங்கண்டல்குளம் 9 அடி (2 அங்குலம் வான்பாய்கின்றது. கொல்ல விளாங்குளம் 10 அடி (ஒரு அங்குலம் வான்பாய்கின்றது) ஐயங்கன்குளம் [illegible] அடி 4 அங்குலம் அம்பலப் பெருமாள் குளம் 8அடி2 அங்குலம், கோட்டைகட்டிய குளம் 8 அடி (2 அங்குலம் வான் பாய்கின்றது) தென்னியங்குளம் 9 அடி 7 அங்குலம்,கல்விளான் குளம் 8 அடி 6 அங்குலம், மல்லாவிக் குளம் 8 அடி ஒரு அங்குலம் பனங்காமங்குளம் 8 அடி 4 இஞ்சி (வான் பாய்கின்றது) (24)

## சாவு அறிவித்தல்



இலங்கை வானொலிபுகழ் இசைநடிகமணி கலாபூஷணம்

### V.N.செல்வராசா



ஏழாலையைப் பிறப்பிடமாகவும், சீரணி சண்டிலிப்பாயை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட V.N.செல்வராசா அவர்கள் 07.11.2004 அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்ற நல்லையா-அன்னம்மா தம்பதிகளின் அன்புப் புதல்வரும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற நடராசா, சிவராசா, செல்வநாயகியின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற கந்தையா இராசம்மாவின் அன்பு மருமகனும், உதயகுமார் (சுவிஸ்), யசோதா (ஆசிரியை, மானிப்பாய்/ சென்ரான்ஸ், சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி), செல்வகுமார் (சண்டிலிப்பாய்),சுரேஸ்குமார் (சுவிஸ்), கவிதா (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஸ்ரீகுமாரன், கலாநிதி, புஸ்பானந்தி, சுனிதா, தில்லைராஜ் ஆகியோரின் அன்பு மாமானாரும் ஆதீஷா, விதுஷா, ஆதர்சன், பவிப்பிரியன், துளசிகா, கவிந்திகா, மதுஷா, பிரகாசினி,கவிப்பிரவீனா, செஷான், ஜலதரங்கன், இலக்கியன், அபிநயன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் 10.11.2004 புதன்கிழமை நண்பகல் பன்னிரண்டு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

தகவல்,
செ.செல்வகுமார்
(செல்வா)
மகன்

துளசிவாசம், சீரணி,
சண்டிலிப்பாய்.

(சி.5264)

## திருமுறிகண்டியில் சிறப்புற நடந்த 52 பாடசாலை அதிபர்கள் சங்கம்

ஐம்பத்திரண்டு பாடசாலை அதிபர்கள் ஒன்று கூடலொன்று திருமுறிகண்டி இந்து வித்தியாலயத்தில் நடைபெற்றது. பிள்ளைகள் நேயப்பாடசாலைகள் என்னும் கருத்துக் குவியல் என்னும் நோக்கில் நடைபெற்ற இவ்வதிபர்கள் ஒன்று கூடல் பிள்ளைகள் நேய பாடசாலைகள் பதினைந்தின கல்வி வளர்ச்சிக்கு இடையூறாக இருக்கும் விடயங்கள் [illegible]ட்பட பாடசாலையில் காணப்படும் குறைபாடுகள் எவை என்பதை கண்டறியப்பட்டன.

முல்லைத்தீவு மாவட்டம் ஒட்டுசுட்டான் பிரதேசத்தின் துணுக்காய் கல்வி வலையத்திற்குள் இப்பதினைந்து பாடசாலைகள் தெரிவுசெய்யப்பட்டிருக்கின்றன.

துணுக்காய் வலய கல்விப் பணிப்பாளர் தேவேந்திரன் தலைமையிலான இவ்வதிபர்கள் 52 அதிபர்கள் சங்கமத்தில் பிரதிக் கல்வி பணிப்பாளர் அ.பரந்தாமன் வலய ஆசிரியர் கல்வி ஆலோசகர் சிவப்பிரகாசம் ஆகியோர் கலந்துகொண்டனர். திருமுறிகண்டி இந்து வித்தியாலயமும் பிள்ளைகள் நேயப்பாடசாலையும் ஒன்றாகும்.

இக் கல்வி அபிவிருத்தி ஆய்வு காலை 8.00 மணிமுதல் மாலை 3.00 மணிவரை நடைபெற்றது. பிள்ளைகள் நேய குறைபாடுகள் கண்டறியப்பட்டதாக கல்விப்பணிப்பாளர் தேவேந்திரன் எமது பிரதேச செய்தியாளரிடம் கூறினார். செய்தியாளரின் ஒருகேள்விக்குப் பதிலளிக்கையில் இப்பாடசாலைகளில் அனேக குறைபாடுகள் காணப்பட்டாலும் அவசரமான சில குறைபாடுகளை யுனிசெவ் நிறுவனத்தின் அனுசரணையோடு நிச்சமாக நிறைவேற்றுவோமெனக் கூறினார். (09)

# அரபாத்தின் 'கோமா' நிலை மேலும் தீவிரம் உயிர் பிழைப்பதற்கான வாய்ப்பு குறைவு

**-மருத்துவமனை வட்டாரம் தகவல்**

**பிரான்சில் கரிஸ் நகரில் சிகிச்சைபெற்றுவரும் பலஸ்தீன சனாதிபதி யசீர்அரபாத் அவர்களின் உடல்நிலை தொடர்ந்து கவலைக்கிடமாக இருப்பதாகவும், அவரது கோமாநிலை மிகவும் தீவிரமடைந்திருப்பதாகவும் மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.**

பலஸ்தீன அதிகாரிகள் அரபாத்தைப் பார்வையிடுவதற்காகத் தற்போது பிரான்ஸ் சென்றுள்ளனர். இவர்கள் பிரான்ஸ் சனாதிபதி உட்பட சிரேஷ்ட அமைச்சர்கள் பலரையும் சந்திக்கவுள்ளனர். பலஸ்தீன அதிகாரிளை அரபாத்தின் அருகில் நெருங்கவிடாது அவரது மனைவி தடுத்துவைத்திருப்பதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

பலஸ்தீன அதிகாரிகள் தமது கணவருக்கு எதிரான சதிமுயற்சியில் ஈடுபட்டுள்ளதாக அவரின் துணைவியார் தெரிவித்திருக்கிறார். எவ்வாறாயினும் அரபாத்தின் உடல்நிலை காரணமாகவே அதிகாரிகளை அவர் அருகில் நெருங்கவிடாது தடுக்கவேண்டி இருந்ததாக அவருக்குச் சிகிச்சையழித்துவரும் மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

பலஸ்தீனப் பிரதமர் அகமட்குவாரி, முன்னாள் பிரதமர் மகமூட் அபாஸ், வெளியுறவு அமைச்சர் நகில்சாவ், பலஸ்தீன சட்டவாக்குப் பேரவையின் சபாநாயகர் நவ்விகத்து ஆகியோர் பிரான்ஸ் சென்றுள்ளனர். அரபாத்தின் உடல்நிலை குறித்து மாறிமாறிவரும் தகவல்கள் குறித்து பலஸ்தீன தலைமைப் பீடம் விரக்தி அடைந்திருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

பலஸ்தீன தலைமைப்பீடம் குறித்து அரபாத்தின் மனைவி தெரிவித்திருந்த கருத்துக்களுக்கு அவர் பலஸ்தீனத் தலைமையிடம் மன்னிப்புக்கோர வேண்டும் எனவும் பலஸ்தீன அதிகாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# அமெரிக்காவில் கனமழை இரண்டு பெண்கள் உயிரிழப்பு

(வோஷிங்டன்)

அமெரிக்காவின் தென்கிழக்கு மாநிலமான குயின்ஸ்ரன் மாநிலத்தில் பெய்துவரும் கனத்த மழையின் காரணமாக இரண்டுபெண்கள் உயிரிழந்துள்ளனர்.

கடந்த இரண்டு நாட்களாகப் பெய்துவந்த கனத்த மழை காரணமாக குடியிருப்புக்களிலும் வெள்ளம் புகுந்துள்ளதுடன் பெருமளவான வீதிகளில் வெள்ளம் பாய்வதால் போக்குவரத்துகள் தடைப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.



ஈராக்கின் மேற்கு பாக்தாத்தில் உள்ள அகதிமுகாம் ஒன்றில் உடைந்த முச்சக்கரவண்டிப் பாகத்துடன் விளையாடும் குழந்தை. (ஈராக்கில் 30இலட்சம் பேர்வரை இடம்பெயர்ந் துள்ளமை குறிப்பிடத்தக்கது.)

# யப்பானின் வடபகுதியில் பூமியதிர்ச்சி இடிபாடுகளுக்குள் ஆறுபேர் சிக்கினர்

(டோக்கியோ)

யப்பானில் வடபகுதியில் நேற்று முன்தினம் பலத்த பூமியதிர்ச்சி ஏற்பட்டுள்ளது. கடந்த மாதம் யப்பானில் ஏற்பட்ட பூமியதிர்ச்சியைத் தொடர்ந்து பிராந்தியத்தில் ஏற்பட்டு வருகின்ற பூமியதிர்வுகளில் புதிய கட்டமாக இந்தப் பூமியதிர்ச்சி ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இங்கு ஏற்பட்ட பூமியதிர்ச்சியின் அளவானது ரிக்டர் அளவில் 5.9 புள்ளியாக மதிப்பிடப்பட்டுள்ளது. இதன் காரணமாகக் கட்டட நிர்மாணத் தளமொன்றில் பணியில் ஈடுபட்டிருந்த ஒருவர் புதையுண்டபோதும் உடனடியாக மீட்கப்பட்டதாகவும் 6பேர் இடிபாடுகளுக்குள் சிக்கி காயமடைந்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த மாதம் 23ஆம் திகதி யப்பானின் மியாட்டா நகரில் ஏற்பட்ட பூமியதிர்ச்சியில் 39பேர் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# பொருளாதாரத் தடையின் தாக்கத்தைக் குறைக்க டொலரின் புழக்கத்தை நிறுத்தியது கியூபா

அமெரிக்கா விதித்த தடைகளின் தாக்கத்தைக் குறைப்பதற்காக கியூபா அரசாங்கம் தமது நாட்டில் டொலரின் புழக்கத்தை நிறுத்தியிருக்கின்றது.

இதன் காரணமாக வர்த்தக நிலையங்கள், உணவு விடுதிகள் ஹோட்டல்கள் ஆகியவற்றில் "பேசோ" என்ற கியூபா நாட்டின் நாணயமே ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. இதன் காரணமாக டொலர் நாணயங்கள் மாற்றப்படுகின்றன.

சனாதிபதி "பிடல்கஸ்ரோ" தலைமையிலான கம்யூனிஸ் அரசாங்கம் சோவியத்ஒன்றியம் வீழ்ச்சியடைந்த சமயம் கியூபாவில் டொலருக்கு சட்டபூர்வ அந்தஸ்தை வழங்கியிருந்தது. ஆனால் தமது நாட்டின் நிதித்துறையை முடக்குவதென அமெரிக்கா மேற்கொண்ட தீர்மானத்தையடுத்து டொலரை நீக்கிவிட தீர்மானித்ததாக கியூபா அறிவித்துள்ளது.

# தாய்வானில் பூகம்பம் சேதம்பற்றித் தகவல் இல்லை

(தாய்பேய்)

தாய்வானின் கிழக்கு கரையோரப் பகுதியில் 6.5ரிச்சர் அளவுகொண்ட பூகம்பம் ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக தாய்பேயில் உள்ள கட்டடங்கள் சுமார் ஒரு நிமிட நேரம் ஆட்டம் கண்டன.

நேற்று முன்தினம் இரவு 11.55 மணியளவில் இந்தப் பூகம்பம் ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. நேற்று அதிகாலை 3.58மணியளவிலும் மீண்டும் அதிர்வுகள் ஏற்பட்டுள்ளன.

இந்தப் பூமியதிர்ச்சி அகழ்வு காரணமாக ஏற்பட்ட சேதங்கள் பற்றி தகவல் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. ஜப்பானில் ஏற்பட்ட பூகம்பத்தின் விளைவாக இது இடம்பெற்றிருக்கலாம் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# மாவோயிஸ்ட் தலைவர் ரேக்காராய் நேபாளப் பொலிசாரால் கைது

(காத்மண்டு)

நேபாள நாட்டைச் சேர்ந்த மா வோயிஸ்ட் தலைவர் கல்ப்பனா சுப்பா என்ற "ரேக்காராயை" மேற்கு வங்க மாநிலம் சிலுக்குரியில் பொலிசார் கைது செய்துள்ளனர்.

நேபாளத்தில் இடம்பெற்ற குண்டு ( வடிப்புச்சம்பவத்தில் கையில் காயமடைந்த கல்ப்பனா ஜல்பாய்புரி மாவ ்த்தின் சிலுக்குரியில் உள்ள ஒரு வீட்டில் தங்கி சிகிச்சை பெற்று ளார். அத்துடன் வீட்டுச் சொந்தக்காரரும் கைது செய்யப்பட்டுள்ளத க தெரிவிக்கப்படுகிறது.

# ஈராக்கின் முக்கிய நகரங்களில் மோதல் தீவிரம் அமெரிக்கப் படையினருக்கு பின்னடைவு?

ஈராக்கில் அமெரிக்க இராணுவத்தினருக்கும், தீவிரவாதிகளுக்கும் இடையிலான மோதல்கள் உக்கிரமடைந்து வருகின்றன.

அந்த நாட்டின் முக்கிய நகரங்கள் பலவற்றிலும் மோதல் தீவிரமாக இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தீவிரவாதிகளின் ஆதிக்கம் நிறைந்ததாகக் காணப்படும், பலூஜாவில் அமெரிக்கப் படையினர் தொடர்ந்தும் முன்னேறியபோதும் நேற்றுப் பெரும் எதிர்ப்பைச் சந்தித்துள்ளனர்.

ஈராக் இடைக்கால அரசாங்கத்தின் அமெரிக்கா சார்பான நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து அந் நாட்டின் பிரதான கட்சிகள் தீவிரவாதிகளுக்கு ஆதரவு அளித்துள்ளன.

இதன்காரணமாகவே தமது படையினர் பின்னடைவுகளை எதிர்நோக்கியதாக அமெரிக்க இராணுவத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பலூஜாவில் மாத்திரமன்றி நீக்கர், பட்டுவா, ரமாரா, பாக்தாத் ஆகிய இடங்களிலும் தீவிர தாக்குதல் நேற்று இடம்பெற்றுள்ளது.

பலூஜாவில் இடம்பெற்ற தாக்குதல்களில் ஐந்து பேரும், புட்சுவாவில் 25 பொலிசாரும், சமாராவில் 33பேரும் உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை ஈராக்கின் பலூஜாவில் ஊரடங்குச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

ஏற்கனவே இராணுவச் சட்டத்திற்கு சமனான அவசர கால சட்டம் அங்கு பிறப்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மனிதாபிமானப் பணிகளை மேற்கொள்வோர் பல்வேறு நாடுகளிலும் உயிராபத்தை எதிர்நோக்குகின்றனர்

**-யுனிசெவ் நிறைவேற்றுப் பணிப்பாளர்-**

பல்வேறு நாடுகளில் மனிதாபிமானப் பணிகளை மேற்கொள்ளும் ஊழியர்கள் உயிராபத்தை எதிர்கொள்வதாக யுனிசெவ் அமைப்பின் நிறைவேற்றுப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

போர் அனர்த்தங்களால் சீர்குலைந்துள்ள ஈராக், ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளில் மனிதாபிமான ஊழியர்களின் நடுவுநிலைமை குறித்துக் கேள்வியெழுப்பப்படுவதே இதற்குக் காரணம் என்றும் அவர் கூறினார். இவ்விரு நாடுகளிலும் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளுக்கு பல பரிமாணங்கள் இருக்கின்றன.

அங்கு இராணுவ வீரர்களே மேற்கொள்கின்றார்கள் என்றும், அவர்கள் பக்கச் சார்பற்றவர்களாகக் கருதப்படுவது அரிது எனவும் அவர் கூறினார்.

தம்முடைய அமைப்பைச் சேர்ந்தவர்கள் ஈராக்கிற்கு திரும்புவது மிகவும் அபாயகரமான தென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.



ஈராக்கில் ஏற்பட்ட குண்டுவெடிப்புக்களில் தீப்பற்றி எரியும் வாகனங்கள் கட்டடங்கள்.

# அராபியக் கடலில் சரக்குக்கப்பல் மூழ்கியது பதினொரு மாலுமிகளை காணவில்லை

குஜராத்தில் பூர்வந்தனில் இருந்து 550 தொன் உணவு தானியங்களை ஏற்றிச்சென்ற "சேரோஜின்" என்ற சரக்குக் கப்பல் ஆபிரிக்காவின் சோமாலியக் கடற்கரைக்கு அப்பால் அராபியக் கடலில் மூழ்கியதில் குறைந்தது 11 மாலுமிகள் காணாமற் போயுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இதேவேளை எட்டுப்பேர் பாதுகாப்பாக நீந்தி வந்துள்ளனர். இந்தக் கப்பல் மூழ்கியது குறித்த அனைத்துத் தகவல்களையும் கண்டுபிடிக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகச் சரக்குக் கப்பல் உரிமையாளரின் வழக்கறிஞர் தெரிவித்துள்ளார்.

இக்கப்பல் சோமாலியாக் கடலின் கரைக்கு மிக நெருக்கமாக இக் கட்டா தீவருகே மற்றுமொரு கப்பலுடன் மோதி இரண்டாக உடைந்துபோனதாகவும் தெரியவந்துள்ளது.

# பொலிசாரின் சட்டவிரோத மின்சாரத்தில் சிக்கிய காட்டு யானை பரிதாபகரமாக உயிரிழப்பு!

## -15 தினங்களுக்குள் இரண்டாவது சம்பவம்

(செட்டிகுளம்)

**வவுனியா செட்டிகுளம் பகுதியில் பரிதாபமாக காட்டு யானை ஒன்று சிறிலங்கா பொலிஸ் காவலரண் மின்சாரம் தாக்கி மரணமாகி யுள்ளது. மதவாச்சி மன்னார் வீதியின் 34 கிலோமீற்றர் பகுதியில் உள்ள ஆண்டியா புளியங்குளம் பகுதியிலேயே ஞாயிறு இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.**

கடந்த 15 நாட்களுக்கு முன்னர் இப்பகுதியில் வேறு ஒரு காட்டு யானையும் இவ்வாறு மின்சாரம் தாக்கி இறந்தமை குறிப் பிடத்தக்கது. பொலிஸ் காவலர ணுக்கு பிரதான மின்கம்பத்தில் இருந்து முள்ளுக் கம்பிமூலம் பொலிசார் மின்சாரம் எடுத்து வரு கின்றனர். இந்த மின்சாரத்தில் கடந்த 15 நாட்களுக்கு முன்னர் பெண்யானை தாக்கப்பட்டு இறந் துள்ளது.

இதன் சோடி என்று நம்பப் படுகின்ற ஆண் யானையே ஞாயிறு இரவு பெண் யானை இறந்த அதே இடத்தில் மின்சாரம் தாக்கி இறந் துள்ளது. இப்பகுதியில் யானை களின் நடமாட்டம் உள்ளமை பொலிசாருக்குத் தெரியும். இருந் தும் சட்டவிரோதமாக மின்சாரம் எடுத்ததன் காரணமாகவே யானை கள் இறந்துள்ளன.

வவுனியா மாவட்டத்தில் பலகாவ லரண்களுக்குப் பொலிசாரும், இராணுவத்தினரும் இவ்வாறு மின்சாரம் பெற்று வருகின்றனர். இவர்களுக்கு எதிராக மின்சார சபையினர் எந்த விதமான நடவ டிக்கையும் எடுப்பதில்லை. ஒரு சாதாரண பொதுமகன் இவ்வாறு எடுத்திருந்தால் அவருக்கு எதிராக கடுமையான நடவடிக்கை மின்சார சபையால் எடுக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. ஏற்கனவே ஒரு யானை இந்தப் பகுதியில் மின் சாரம் தாக்கி இறந்துள்ள நிலையில் வனவளத்துறையினரும், பொலிசா ருக்கு எந்த விதமான அறிவுறுத்தல் களும் கொடுக்காதது இப்பகுதி மக்கள் மத்தியில் பெரும் விசனத் தைத் தோற்றுவித்துள்ளது. கடந்த ஒரு மாதத்துக்குள் நான்கு காட்டு யானைகள் விபத்து காரணமாக இறந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (21)

## முறிப்பு – ஸ்கந்தபுரம் வீதியால் அவலம்

(கிளிநொச்சி)

முறிப்பு ஸ்கந்தபுரம் பிரதான வீதி மிக மோசமாக சேதமடைந் துள்ளது. குன்றும் குழியுமாக காணப்படும் இவ் வீதியூடாக போக்கு வரத்தினை மேற்கொள்ளும் பொது மக்கள் பலத்த சிரமத்தினை எதிர் கொண்டு வருகின்றனர். (15)



தமிழீழ மாவீரர் தினத்தை முன்னிட்டு நேற்றையதினம் கிளிநொச்சி கனகபுரம் மாவீரர் துயிலுமில்லத்தில் கிளிநொச்சி தொழில்நுட்ப கல்வி நிறுவன ஊழியர்கள், மாணவர்கள் மற்றும் அரச செயலக ஊழியர்கள் சிரமதானப் பணியினை மேற்கொண்டிருப்பதனைப் படத்தில் காணலாம்.

(படம் -சோதி)

## சிறுவர் பாதுகாப்புக் குழு பற்றிய விழிப்புணர்வுப் பயிற்சி நெறி

(வவுனியா செய்தியாளர்)

வவுனியா மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழு பற்றிய விழிப்புணர்வுப் பயிற்சி நெறி ஒன்று வவுனியாவில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், உதவிக் கல்விப்பணிப்பாளர்கள் ஆகியோருக்கு சிறுவர் பாதுகாப்புப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் நடாத்தப்படும் இப்பயிற்சிநெறி இன்று புதன்கிழமை காலை 9.30 மணிமுதல் 12.30 மணி வரை வவுனியா பொது வைத்தியசாலை கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. (10)

## கல்வியில் பாதிப்புற்ற மாணவர்களால் மன்னாரில் பேரணிக்கு ஏற்பாடு

(வவுனியா செய்தியாளர்)

பல்கலைக்கழக அனுமதியால் கல்வியில் பாதிப்புற்ற மாணவர் கள் மன்னாரில் இன்று பேரணி ஒன்றுக்கு ஏற்பாடு செய்துள்ளனர்.

வசதியுள்ள பிரதேசத்தில் இருந்து வரும் மாணவர்களை வசதி குறைந்த பிரதேசத்தில் உள்ள பாடசாலைகளில் க.பொ.த உயர்தர வகுப்புக்களில் அனுமதிப் பதைக் கண்டித்தே இவ் ஆர்ப் பாட்டப் பேரணி நடாத்தப்பட வுள்ளது. இன்றுகாலை 10.00 மணிக்கு மன்னார் மாவட்ட பெற்றோரும், பழைய மாணவர் களும் ஊர்வலமாக வவுனியா அரச செயலகத்திற்குச் சென்று அங்கு பல்கலைக்கழக மானி யங்கள் ஆணைக்குழுவிற்கான மகஜரை அரச அதிபரிடம் கைய ளிக்கவுள்ளனர். (10)

## மாதாந்த கலந்துரையாடல் மாத இறுதிக்குப் பிற்போடல்

(முல்லை)

முல்லை மாவட்ட அரச அதிப ரின் அலுவலகத்தில் நடைபெற வுள்ள மாதாந்த கலந்துரை யாடல்கள் பிற்போடப்பட்டுள்ளது.

தவிர்க்க முடியாத காரணத் தால் 18ஆம் திகதிநடைபெற இருந்த கூட்டங்கள் எதிர்வரும் 29.11.2004அன்றும் 19ஆம் திகதி நடைபெற இருந்த கலந்துரை யாடல்கள் 30.11.2004 அன்றும் நடைபெறும்.

29ஆம் திகதி நடைபெற உள்ள கலந்துரையாடல்கள் மாவட்ட விவசாயக் குழுக் கலந்துரையாடல் மு.ப.10.00 மணிக்கும்,மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் பி.ப.1.30மணிக்கும், தேசிய வீடமைப்புக்குழுக் கூட்டம் பி.ப.3.00 மணிக்கும் நடைபெறும் எனவும் 30.11.2004 அன்று நடை பெறவுள்ள கூட்டங்கள், அத்தியா வசிய சேவைகள் குழுக்கூட்டம் மு.ப.9.30 மணிக்கும்,சுற்றாடல் பாதுகாப்புக் குழுக்கலந்துரை யாடல் மு.ப.11.30 மணிக்கும் நடைபெறவுள்ளது என முல்லை மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார். (20)

## நாச்சிக்குடாவில் முன்பள்ளி வேண்டும்

(கிளிநொச்சி)

நாச்சிக்குடா பிரதேசத்தில் முன்பள்ளி இன்மையால் சிறார் கள் தமது அடிப்படைக்கல்வியை தொடர முடியாதுள்ளனர்.

பூநகரி பிரதேச செயலர் பிரி வில் உள்ள நாச்சிக்குடா பிர தேசத்தில் இருநூறிற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றன.

எனவே தமது பிள்ளைகள் அடிப்படைக்கல்வியினைப் பெற வசதிகளை ஏற்படுத்தி தருமாறு சம்பந்தப்பட்டவர்களை இப்பகுதி பொதுமக்கள் கேட்டுக்கொள் கின்றனர். (15)

## மாநாட்டு மண்டபம் இன்று திறந்துவைப்பு

(முல்லை)

முல்லை.மாவட்ட கமநல அபிவிருத்தித்திணைக்கள மாநாட்டு மண்டபம் இன்று 10.ஆம் திகதி பி.ப.2.00 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளதாக முல்லை.மாவட்ட கமநல அபி விருத்தித்திணைக்கள உதவி ஆணையாளர் க.தர்மலிங்கம் அறியத்தந்துள்ளார். (20)

## வாணிப நிலையத்தில் படுத்திருந்தவர் சுவர் இடிந்து வீழ்ந்து படுகாயம்

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பில் வாணிப நிலையத்தின் சுவர் இடிந்து விழுந்ததால் உள்ளே உறங்கிக் கொண்டிருந்தவர் பலத்த காயங்களுக்குள்ளானார். புதுக்குடியிருப்புப் பகுதியில் கடந்த சனிக்கிழமை மழை காரணமாக வாணிப நிலையமொன்றினுள் ஒதுங்கி அங்கு உறங்கிக் கொண்டிருந்த 32 வயதுடைய நபர் மீது சுவர் இடிந்து விழுந்தது. இதனால் காயமடைந்த அவரை தமிழீழ காவல் துறையினர் புதுக்குடியிருப்பு மருத்துவ மனையில் சிகிச்சைக்காக அனுமதித்தனர். இவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டுள்ளார்.

இதேவேளை புதுக்குடியிருப்பு பகுதியில் மழைகாரணமாக சுவர்கள் இடிந்து வீழ்ந்து பாதுகாப்பற்றிருக்கும் வாணிப நிலையங்களுக்கு பாதுகாப்பு வழங்கும் நோக்குடனும் அப் பகுதி காவல் துறையினர் விசேடசுற்றுக் காவற்கடமைகளில் ஈடுபட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (08)

## ஓமந்தை இராணுவ சூனியப்பிரதேசத்தில் இருவருட இழுத்தடிப்பின் பின் இராணுவம் மிதிவெடி அகற்றல்

(வவுனியா செய்தியாளர்)

ஓமந்தை இராணுவ சூனியப் பிரதேசத்தில் உள்ள மிதிவெடி களை அகற்றும் பணியை சிறி லங்கா இராணுவம் இருவருட தாமதத்தின் பின்னர் ஞாயிற்றுக் கிழமை ஆரம்பித்துள்ளது.

ஓமந்தை சூனியப்பிரதேசத்தில் 50மீற்றர் விடுதலைப்புலிகளுக்கும், 50மீற்றர் இராணுவத்திற்கும் சொந்தமான பிரதேசமாகும். இதில் இராணுவத்திற்குச் சொந்தமான 50மீற்றர் பிரதேசத்தில் உள்ள மிதிவெடிகளை இராணுவ மிதி வெடி அகற்றும் பிரிவினர் அகற்ற ஆரம்பித்துள்ளனர்.

ஏ-9 வீதி திறக்கப்பட்டு இரு வருடங்களான நிலையில் தற்போதே இம் மிதிவெடிகள் அகற்றும் பணியை இராணுவம் மேற்கொள்கின்றது. விடுதலைப் புலிகளுக்குச் சொந்தமான சூனியப் பிரதேசத்தில் இருந்த மிதி வெடிகளை ஏற்கனவே மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவு அகற்றி உள்ளமை குறிப்பிடத் தக்கதாகும். (10)



அண்மையில் பெய்து வரும் தொடர் மழையினால் மல்லாவி அனிஞ்சியன்குளம் 2ஆம் பகுதியும் அகலியா முன்பள்ளி பாடசாலை அருகேயுள்ள வீதிகள் வெள்ளத்தினால் மூடப்பட்டு நீர்பாய்வதால் இப்பகுதி மக்கள் பல இடர்களைச் சந்திக்கின்றனர். மேற்படி வீதிகள் பல வருடங்களாக எவ்வித புனரமைப்பு பணிகள் இன்றி இருந்து வருகின்றது. கடந்த சில மாதங்களிற்கு முன் துறைசார்ந்த அதிகாரிகள் இவ் வீதிகளை பார்வையிட்டும் சென்றமை குறப்பிடத்தக்கது. (படம்- அன்ரனி)

### - உடைப்பெடுக்கும் அபாயம் உள்ளதால் -

## கமக்கார அமைப்புக்கள் விழிப்புடனிருந்து சிறுகுளங்களைப் பாதுகாக்க வேண்டுகை

(முல்லை)

முல்லை மாவட்டத்தில் சிறு குளங்கள் உடைப்பெடுக்கக் கூடிய அபாயம் இருப்பதாக முல்லை மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்கள உதவி ஆணையாளர் க.தர்மலிங்கம் தெரிவித்தார்.

முல்லை மாவட்டத்தில் தொடர்ச்சியாகப் பெய்து வரும் பெருமழைகாரணமாக சிறு குளங்கள் யாவும் நிரம்பி வழிகின்றன. தொடர்ந்தும் மழை பெய்யக்கூடிய காலநிலை காணப்படுவதால் சிறுகுளங்களின் கீழ் உள்ள கமக்கார அமைப்புக் கள் விழிப்புடன் இருந்து குளங் களை பாதுகாக்குமாறு முல்லை மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் க.தர்மலிங்கம் கேட்டுகொள்கின்றார். (20)

## நாயாற்றில் அமைக்கப்பட்ட 27தற்காலிக வீடுகள் கையளிப்பு

(முல்லை)

மணலாறு நாயாற்றுப்பகுதிக் கிராமத்தில் ஜே.ஆர்.எஸ். நிறுவனத்தால் அமைக்கப்பட்ட 27தற்காலிக வீடுகள் உரியவர்களிடம் எதிர்வரும் 14ஆம்திகதி கையளிக்கப்படவுள்ளது. 5இலட்சத்து 50ஆயிரம் ரூபாவில் இவ் வீடுகள் அமைக்கப்பட்டன. ஒரு வீட்டிற்கு சுமார் 20 ஆயிரம் செலவிட ப்பட்டதுடன் முன்பள்ளியும் அமைக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்வு ஜே.ஆர்.எஸ். நிறுவனத்தின் வெள்ளிவிழா நாளில் கையளிக்கப் படவுள்ளதாக நிறுவன முல்லை இணைப்பாளர் தெரிவித்தார். (20)

# உறுதி, தனித்துவம் மிக்க தலைமையின் கீழ்

# நாங்கள் தலைநிமிர்ந்து நிற்கின்றோம்

## - பாராளுமன்ற உறுப்பினர் ரவிராஜ்

(தென்மராட்சி)

**பல்வேறு சோதனைகளுக்கும் அர்ப்பணிப்புக்களுக்கும் மத்தியில் எமது விடுதலை இயக்கம் இந்த யுத்த நிறுத்தத்தை பேணி வருவது கண்டு உலகம் வியக்கிறது. இவ்வாறு நேற்று முன்தினம் தென்மராட்சியில் இடம் பெற்ற தேசிய எழுச்சிப் பேரவையின் சங்கம நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் தெரிவித்துள்ளார்.**

இன்று தமிழினம் ஒரு வலிமை மிகுந்த பெரும் அரசியல் சக்தியாக உறுதியானதும் தனித்துவம் மிக்கதுமான ஒரு தலைமையின் கீழ் சிங்களப் பாராளுமன்றத்திலே வீற்றிருக்கின்றது. எமது உரிமைகளை பெறுவதற்கு கெஞ்சும் நிலையில் தமிழர்களுக்கு நிலைமைகள் இன்று இல்லை. தரமுடியாது எனச் சொல்வதற்கும் ஏகாதிபத்திய பௌத்த சிங்கள இனத்திற்கு அதிகாரம் இல்லை என்பதை சந்திரிகா முதல் ரணில் விக்கிரமசிங்க வரை நன்றாக புரிந்துள்ளார்கள்.

ஏனெனில் தமிழர்களின் பின்னால் வரக்கூடிய சவால்களைச் சமாளிப்பதற்கும் சந்திப்பதற்கும் எப்போதுமே எமது படைகள் தயார் நிலையில் இருப்பதே இவற்றிற்குக் காரணம். சமாதானத்திற்கு எப்போதுமே புலிகள் இணங்கி வந்திருக்கின்றார்கள். இன்றும் தயாராகவே இருக்கிறார்கள். திறந்த மனதுடனும் தெளிந்த சிந்தனையுடனும் சம பலத்துடனும் பேச்சு மேசைக்கு புலிகள் எப்போதுமே தயார். ஆனால் இன வெறி சிங்கள தலைமைகளோ. அதன் தலைவர்களோ இன்று அந்த நிலையிலில்லை. கால இழுத்தடிப்புச் செய்து பிரச்சினையின் போக்கை வேறு திசையில் கொண்டு சென்று புலிகள் மீது அவப்பழி சுமத்த திட்டமிடுகின்றார்கள்.

புலிகள் பேச்சு மேசைக்கு வரவில்லை, அமைதி முயற்சிக்குப் புலிகளின் இடைக்காலத் தன்னாட்சிப் பிரேரணை-தனிநாட்டு அலகுக்கான மற்றுத் திட்டம் என்றும் ஒரு பொய்யான பிரச்சாரத்தை சிறிலங்கா அரசு இயந்திரமும்,இன வெறி பௌத்த அமைப்புகளும் தமிழ் இனத் துரோகிகளும் இணைந்து செய்து வரும் பிரச்சார நடவடிக்கைகளால் உண்மையான அமைதியும் இந்த சமாதான முயற்சிகளும் இன்று அதன் தடத்திலிருந்து விலகிச் செல்கின்றது. சர்வதேச ரீதியிலும் தனது இராணுவப்பலத்தை அதிகரிக்க அரசு பகீரத முயற்சியில் ஈடுபட்டுள்ளது என்றும் அவர் கூறினார். (28)

### வீதிகள் புனரமைக்க நிதி ஒதுக்கீடு

தென்மராட்சி சாவகச்சேரிப் பகுதியில் நீர்ப் திட்டத்தின் கீழ் பிரதான வீதிகளைப் புனரமைக்க 4.4மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. • (28)

## சோமஸ்கந்த கல்லூரிமுன் சமூக விரோத நடவடிக்கை

(நல்லூர்)

புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரிக்கு முன்பாகச் செல்லும் பெண்கள் அப்பகுதியில் கூடும் இளைஞர்களின் பல்வேறு சேட்டைகளுக்கும் முகம் கொடுத்து வருவதாக அப்பகுதி மக்கள் கூறுகின்றார்கள்.

பாடசாலை விடும் நேரங்களிலும் மற்றும் மாலைப்பொழுதிலும் அந்த இடத்தில் கூடும் இளைஞர்கள் பாடசாலை மாணவிகள், ரியூசன் சென்றுவரும் பிள்ளைகள் என பெண்களைப் பல்வேறு துன்புறுத்தல்களுக்கும் உட்படுத்துகின்றனர்.

இவ் இளைஞர்களுடன் கதைப்பதற்கு அப்பகுதிப் பொதுமக்கள் அச்சம் காட்டுகிறார்கள்.இவர்களுக்கும் பொலிசாருக்கும் இடையே நெருக்கமான உறவு காணப்படுவதே காரணம் ஆகும்.

இச் சந்தியில் உள்ள ஆட்டோ சாரதிகளும் இச் செயற்பாட்டில் பங்கேற்பதாகவும் தெரியவருகிறது. இத்துடன் மாலை வேளைகளில் மது போதையில் நின்று பல்வேறு அட்டகாசங்களையும் புரிந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (41)

## முளாய் இராணுவ ஆக்கிரமிப்புப் பகுதியில் பனைமரங்கள் தொடர்ந்தும் அழிப்பு

(யாழ்ப்பாணம்)

முளாய்ப்பகுதி இராணுவ பாதுகாப்பு வலயத்துள் படையினரால் ஆக்கிரமித்து வைக்கப்பட்டிருக்கும் தம் காணிகளில் இருந்து தினமும் பனை மரங்கள் தறிக்கப்பட்டு வருவதாக அதனுள் உள்ள காணிகளின் உரிமையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

நீண்டகாலமாக இப்பகுதியிலுள்ள பலநூற்றுக்கணக்கான ஏக்கர் நிலப்பரப்பை தம் பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தினாலும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின் அவற்றை அதன் உரிமையாளர்களிடம் கையளித்து மீளக் குடியேற அனுமதித்தப்படையினர் தம் காணிகளுக்குள் இருக்கும் பனைமரங்களை தறித்துத் துண்டுகளாக்கி சுழிபுரம், மாதகல் போன்ற கடற்கரை முகாம்களை பலப்படுத்துவதற்கு வாகனங்கள் மூலம் எடுத்துச் செல்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (33)

## மிதிவெடி அகற்றப்பட்ட பிரதேசத்தில் அபாயம்!

(யாழ்ப்பாணம்)

அரியாலைப் பகுதியில் உள்ள மிதிவெடி அகற்றப்பட்ட பிரதேசங்களிலும் வெடிபொருள் அபாயங்கள் காணப்படுவதாக அப்பகுதி மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

மிதிவெடிகளை அகற்றும் சர்வதேச தொண்டர் நிறுவனத்தினால் மேற்படி பகுதியில் மிதிவெடிகள் அகற்றப்பட்டு அப்பகுதிகள் வெடிபொருள் அபாயமற்றவை என மக்களை நடமாட அனுமதிக்கப்பட்டுள்ள போதும் வெடிபொருட்கள் அகற்றப்பட்ட இடங்களிலேயே பல வெடிபொருள் விபத்துக்கள் ஏற்பட்டிருப்பதுடன் பொது மக்களால் பல வெடிபொருட்கள் மீட்டெடுக்கப்பட்டுள்ளமையைச் சுட்டிக்காட்டியே அப்பகுதி மக்கள் இவ்வாறு குற்றஞ்சாட்டியுள்ளனர்.(33)

## யாழ்-மண்டைதீவு வீதிப் புனரமைப்பிற்கு கடற்படை தொடர்ந்து முட்டுக்கட்டை

யாழ்ப்பாணம்- மண்டைதீவிற்கிடையான வீதியைப் புனரமைப்புச் செய்வதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட அங்கு நிலை கொண்டுள்ள கடற்படையினர் பெரும் முட்டுக்கட்டையாக இருந்து வருவதாக தெரியவருகின்றது.

கடந்த பல வருடங்களாக மேற்படி வீதி செப்பனிடப்படாத நிலையில காணப்படுவதால் இவ் வீதியால் பயணிப்போர் பல்வேறு சிரமங்களையும் அனுபவித்து வருவதால் சம்பந்தப்பட்ட தரப்பி னர் அவ் வீதியை புனரமைப்புச் செய்ய பல தடவை முயற்சி செய்துவந்தனர்.

எனினும் மண்டைதீவானது இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலயத்துள் இருப்பதனைக் காரணம காட்டி அவ் வீதியை புனரமைப்புச் செய்ய அனுமதி மறுத் துள்ளனர். இதனால் மக்க ளின் அவல நிலை தொடர்கிறது. (33)

### தீபாவளித் தினத்தில் நிறைவு விழா

வட அல்வை நக்கீரன் விளையாட்டுக்கழக சனசமூக நிலையத்தின் 56 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் விளையாட்டும் தீபாவளித் தினத்தன்று விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது. அன்று காலை நிகழ்வாக 5 மைல் ஓட்டமும் மாலை நிகழ்வாக மரதன் ஓட்டமும், கயிறு இழுத்தல், கிறிஸ் கம்பம் ஏறுதல் மற்றும் விளையாட்டுகளும் நடைபெறவுள்ளது. (45)

## கொக்குவில் இந்துக்கல்லூரியில் இன்று இருமாடிக்கட்டடம் திறப்பு

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் இந்துக்கல்லூரியில் புதிதாக அமைக்கப்பட்ட மாடிக்கட்டடத் திறப்பு விழா இன்று புதன்கிழமை மாலை 4.00 மணியளவில் இடம் பெறவுள்ளது.

இவ் புதிதாக அமைக்கப்பட்ட இரண்டு மாடிக்கட்டடத்தினை யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் விக்கினேஸ்வரன் நாடாவை வெட்டித் திறந்துவைக்கவுள்ளார்.

கல்லூரியின் பழைய மாணவர் சங்கத் தலைவர் நடராசாவின் தலைமையில் இடம் பெறவுள்ள இந்நிகழ்வில் யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் விக்கினேஸ்வரன், நல்லூர் ஆதீன முதல்வர், இந்து சமயப் பேரவைத் தலைவர் விநாசித்தம்பி, தமிழீழ கல்விக் கழகத் துணைப்பொறுப்பாளர் அருள் மாஸ்ரர் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

நிகழ்வில் வாழ்த்துரையை அக்கல்லூரியின் முன்னாள் அதிபர் பஞ்சலிங்கம், அக்கல்லூரியின் தற்போதைய அதிபர் கமலநாதன் ஆகியோரும், பாராட்டு உரையை யாழ்.கல்வித்திணைக்களப் பொறியியலாளர் சிவபாலன், தமிழீழக் கல்விக்கழகத் துணைப்பொறுப்பாளர் அருள்மாஸ்ரர் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (36)

## வீடியோக் கடையில் நூதன மோசடி

(தென்மராட்சி)

கொடிகாமத்தில் பருத்தித்துறை சாலையில் உள்ள வீடியோக் கடை ஒன்றில் வீடியோ படக்கொப்பி எடுக்க வந்த இனம் தெரியாத நபர் ஒருவர் குறிப்பிட்ட இடத்தினுடைய விலாசத்தைக் கொடுத்து அத்துடன் அடையாள அட்டையையும் கொடுத்து ஐந்து புதிய படக்கொப்பிகளைப் பெற்றுக கொண்டு சென்றுள்ளார்.

அடையாள அட்டையை சரிபார்க்காத கடைக்காரர் இரண்டு நாட்கள் கழித்து அடையாள அட்டையை சரிபார்த்த பொழுது சம்பந்தப்பட்ட நபர் கொடுத்த அடையாள அட்டை வேறு ஒருவருடையது என்றும், வீடியோக் கொப்பிகளை பெற்றுச் சென்றவருடையதில்லை என்றும் தெரிய வந்துள்ளது.

அத்துடன் அவர் கொடுத்த முகவரியை விசாரித்தபோது அவ்வாறான முகவரியில் அந்த நபர் இல்லை என்றும் தெரிய வந்துள்ளது. (28)

### சூடு பிடிக்கும் வியாபாரம்

(நல்லூர்)

கொட்டும் மழையிலும், தீபாவளி வியாரபாரம் யாழ்.நகர் பகுதியில் மிகவும் சூடுபிடித்துக் காணப்படுகின்றது.

என்றுமில்லாத அளவுக்கு நடைபாதை வியாபாரங்களின் வியாபாரமானது களைகட்டிக் காணப்படுவதுடன் குடாநாட்டில் இருந்து வரும் பல்வேறு இடத்து மக்களும் இப்பொருட்களைக் கொள்வனவு செய்வதிலும் மிகவும் ஆர்வம் காட்டி வருகின்றார்கள்.

எனினும் மழை காரணமாக யாழ்.நகர்ப்பகுதி சேறும், சகதியுமாகக் காணப்படுகின்றது. அத்துடன் குப்பைகளும் அகற்றப்படாதுள்ளது. (41)

## அவயவங்களை இழந்தோருக்கு மறுவாழ்வளிப்புத் திட்டம்

(யாழ்ப்பாணம்)

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் தூதுவராலயமும், ஜெயப்பூர் செயற்கை உறுப்புக்களைப் பொருத்தும் நிறுவனமும் இணைந்து யாழ்.குடாநாட்டில் போரினால் பாதிக்கப்பட்டு உறுப்புக்களை இழந்தோருக்கான மறுவாழ்வு வழங்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளன. அந்த அடிப்படையில் யாழ்.குடாநாட்டில் யுத்த அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டு கை,கால் போன்ற உறுப்புக்களை இழந்தும் வசதிவாய்ப்பு இன்மையால் செயற்கை உறுப்புக்களைப் பொருத்தாத பின்தங்கிய பிரதேச வாழ் மக்களை நேரடியாகச் சந்தித்து அவர்களுக்குரிய செயற்கை உறுப்புக்களை வழங்கியுள்ளன. இந்நடவடிக்கை மூலம் தென்மராட்சி, தீவகம், வடமராட்சி வாழ் மக்கள் அதிகம் பயனடைந்துள்ளனர். (33)

## மதுபானக் கடையில் வாய்த்தர்க்கம் கத்திக்குத்தில் முடிந்தது

(நல்லூர்)

மதுபானக்கடையில் மாமன், மருமகனிடம் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கத்திக் குத்தில் போய் முடிவடைந்துள்ளது

நேற்று முன்தினம் சுன்னாகம் பொலிஸ் நிலையத்திற்கு அண்மையாகவுள்ள மதுபானக் கடையில் இச்சம்பவம் இடம் பெற்றது. வலி.வடக்குப் பகுதியில் இருந்து இடம் பெயர்ந்து சங்கானையில் வசிப்பவர் இளவாளையில் வசிக்கும் தனது மாமனாரை கத்தியால் குத்தி கையில் காயப்படுத்தியுள்ளார்.

சுன்னாகம் பொலிசாரால் குறித்த நபர் கைது செய்யப்பட்டு மல்லாக மாவட்ட நீதிபதி திருமதி சறோஜினி இளங்கோவன் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்ட போது இருவார காலத்திற்கு விளக்கமறியலில் வைக்கும் படி கட்டளையிடப்பட்டுள்ளது. (41)

## கண்ணாடி இழை படகுகள் தயாரிப்பு திருத்தல் பயிற்சி நெறி

(யாழ்ப்பாணம்)

யாழ். தீவகத்திலுள்ள காரை நகர் பிரதேச மீனவர்களின் நன்மை கருதி "போரூட்" நிறுவனத்தால் கண்ணாடி இழைப்படகுகளை தயாரிப்பது மற்றும் திருத்துவது தொடர்பான பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

காரைநகர் கடற்றொழிலாளர் சங்கத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக நடத்தப்பட்டு வரும் இப்பயிற்சியில் மீனவர்களின் குடும்ப அங்கத்தவர்கள் உள்வாங்கப்பட்டு பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றனர். (33)

## எழுது மட்டுவாள் பகுதியில் கால்நடைகள் அபகரிப்பு

எழுது மட்டுவாள் இராணுவ பாதுகாப்பு வலயப்பகுதிகளிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் இடம் பெயர்ந்து சென்ற இப்பிரதேச மக்களின் நூற்றுக்கணக்கான மாடுகள் குறிப்பிட்ட சிலரால் இராணுவத்தின் துணையுடன் இறச்சிக்காக வெட்டப்படுவதுடன் பிடித்து குறிவைக்கும் சம்பவங்கள் பல இடம் பெற்றுவருவதாக இப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். தங்களுடைய கால்நடைகளை பார்ப்பதற்கோ பிடிப்பதற்கோ உயர்பாதுகாப்பு பிரதேசத்துக்கள் செல்ல முடியாத மக்கள் தங்களுடைய கால்நடைகள் அநியாயமாய் சிலரால் அபகரிக்கப்படுவது குறித்து பெரும் கவலை அடைந்துள்ளனர். (28)

# போசாக்கு நிலை பாதிக்கப்பட்ட சிறார்களின் நலனை நோக்காகக் கொண்டு செயற்படும் "வன்னி சுரபி"

தமிழீழ விடுதலைப் போர் உச்சக் கட்டத்தை எட்டியிருந்த காலப்பகுதியில் சிறிலங்கா அரசினால் திட்டமிட்ட ரீதியில் மேற்



நிலைய ஆலோசகர்

கொள்ளப்பட்ட இன அழிப்பு நடவடிக்கைத் திட்டத்தின் முக்கிய வடிவமாக அமைந்தது பொருளாதாரத்தடை. இதனைத் தமிழர்கள் மீது திணித்து அதனூடாக தமிழரின் போராட்ட வலுவை இழக்கச் செய்ய முடியுமென்ற எண்ணத்தோடு செய்யப்பட்ட அரசாங்கத்தின் திட்டங்களை முறியடித்து அந்த இக்கட்டான சூழலில் தமிழர்கள் தமக்குரிய பொருளாதார்த்தைத் தாமே ஈட்டிக்கொள்வதற்கான பல்வேறு வழி முறைகளை உருவாக்கி, அவற்றை நடை முறைப்படுத்தி விடுதலைப் போருக்கு உர மூட்டிய பெருமைக்குரிய நிறுவனமாக திகழ்வது தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம். இந்நிறுவனம் தற்போது ஏற் பட்டுள்ள சமாதானச் சூழலை பயன்படுத்தி புதிய உத்தி முறைகளையும் புதிய தொழில்நுட்ப முறைகளையும் கையாண்டு பல்வேறு உற்பத்திகளையும், கைத்தொழில் பேட்டைகளையும் நிறுவித் தமிழீழத்தில் தன்னிறைவான பொருளாதாரத்தைக் கட்டி யெழுப்ப அயராது உழைத்து வருகின்றது. இதன் அடிப்படையில் பொருண்மிய மேம் பாட்டு நிறுவனத்தினரால் தற்காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட கைத்தொழில் நிலைய மான பால் பொருள் உற்பத்தி நிலை யத்தின் உற்பத்திச் செயற்பாடுகள் பற்றியும் அதனுடைய வளர்ச்சிப் போக்கு இதனால் மக்கள் அடையும் பயன்கள் என்பனபற்றி அவ் உற்பத்தி நிலையத்தின் ஆலோசகரான மயில்வாகனம் துரைசிங்கம் அவர்களை சந்தித்துக் கேட்டோம்.

***. தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் இந்தப் பால்பொருள் உற்பத்தி நிலையம் ஆரம்பிக்கப் படுவதற்கு தூண்டுதலாக அமைந்த காரணிகள் எவை?**

தமிழீழத்தில் விலங்கு வேளாண்மையில் ஈடுபட்டுள்ளவர்கள் பசுக்களிலிருந்து பெறப்படும் பாலினைச் சந்தைப்படுத்து வதற்கான வசதியில்லா திருந்தது. இதன் காரணமாக தமது தேவைக்கு மட்டும் பாலைப் பெற்றுக்கொண்டு மிகுதிப் பாலைப் பசுக்களிலிருந்து கறக்காமலேயே விட்டு வந்தனர். இதன் காரணமாக பால் உற்பத்தி படிப்படியாகக் குறைவடைய மக்கள் மத்தியில் போசாக்கும் குறைவடையத் தொடங்கியதோடு மக்கள் கூடுதலாகத் தென் பகுதியில் இருந்து இறக்குமதி செய்யப்படும் இரசாயனக் கலவைகள் கொண்ட பானங்களைப் பருகி வந்தனர். இதனால் எதிர்காலத்தில் சமுதாயம் அடையவிருந்த அபாயகரமான விளைவுகளைத் தடுக்கும் நோக்கில் மேற் கொள்ளப்பட்ட ஆய்வின் வெளிப் பாடாகவே இப் பால் பொருள் உற்பத்தி நிலையம் உருவாக்கப்பட்டது. இத் திட்டத் திற்கு முற்று முழுதாக அரச சார்பற்ற நிறுவனமான டெரிடெக் எனப்படும் நிறுவனம் பொறுப்பேற்று உற்பத்திக்கு ஊக்குவிப்பினையும் நிதி உதவிகளையும் வழங்கி வருகின்றது. இந் நிறுவனத்தின் உற்பத்திப் பொருட்களின் தன்மையினையும் தமிழீழத்தின் உற்பத்திப் பொருள் என்பதனையும் வெளிப்படுத்தும் முகமாக வன்னி சுரபி எனப் பெயரிட்டு உற்பத் திகளை மேற்கொண்டு வருகின்றோம். 2003ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் ஆரம் பிக்கப்பட்டுள்ள இந்த உற்பத்தி நிலையம் படிப்படியாக வளர்ச்சியடைந்து வரு கின்றது. அத்தோடு பால் உற்பத்தியா ளர்களிடமிருந்தே நியாயமான விலையைக் கொடுத்து பாலைப் பெற்று வருகின்றோம். இதனால் பால் உற்பத்தியாளர்களும்



ஊக்குவிக்கப்படுகிறார்கள். எமது இந்தப் பால் பொருள் உற்பத்தி நிலையம் ஆரம்பித் ததன் பின்னர் தமிழீழத்தில் பால் உற்பத்தி கணிசமாக உயர்வடைந்து வரு வதையும் அவதானிக்க முடிகிறது. அத்தோடு எமது உற்பத்திப் பொருட்களை பாடசாலைகள் சிறுவர் இல்லங்கள் ஆகிய வற்றுக்கு குறைந்த விலையில் வழங்கி வருகின்றோம் இதனால் இளம் தலை முறையினர் மத்தியில் போசாக்கை வழங்கும் திட்டமும் ஓரளவு நிறைவேறி வருகின்றது.

| 04. | சுன்னாகம் மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 3000.00 | 130000.00 | 100.00 |
| 05. | சுன்னாகம் ஆட்டிறைச்சிக்கடை | 300.00 | 2000.00 | 16000.00 | 60.00 |
| 06. | கருவாட்டுக்கடை இல.03 | 300.00 | 2000.00 | 13000.00 | 60.00 |
| 07. | கருவாட்டுக்கடை இல.04 | 300.00 | 2000.00 | 13000.00 | 60.00 |
| 08. | கருவாட்டுக்கடை இல.05 | 300.00 | 2000.00 | 6500.00 | 60.00 |
| 09. | கோழிக்கடை இல.06 | 300.00 | 2000.00 | 6500.00 | 60.00 |
| 10. | கோழிக்கடை இல.07 | 300.00 | 1000.00 | 5000.00 | 60.00 |
| 11. | கோழி உரித்தல் | | | | |
| | ***உடுவில் உப அலுவலகம்*** | | | | |
| 01. | மருதனார்மடம் பொதுச் சந்தை | 1000.00 | 10000.00 | 2700000.00 | - |
| | (துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு உட்பட) | 300.00 | 2000.00 | 32000.00 | - |
| 02. | இணுவில் பொதுச்சந்தை | 500.00 | 5000.00 | 86000.00 | - |
| 03. | மல்வம் மாட்டிறைச்சிக்கடை | 300.00 | 3000.00 | 41000.00 | - |
| 04. | தாவடி ஆட்டிறைச்சிக்கடை | | | | |
| 05. | இணுவில் சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 300.00 | 2000.00 | 22000.00 | 100.00 |
| | ***ஏழாலை உப அலுவலகம்*** | | | | |
| 01. | ஏழாலை மயிலங்காடு | 500.00 | 3000.00 | 63000.00 | - |
| | மாட்டிறைச்சிக்கடை | 300.00 | 2000.00 | 13000.00 | - |
| 02. | ஏழாலைச்சந்தை | | | | |

வலிகாமம் தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம்.
05.11.2004.

(சி-10607)

திருமதி.ச.சொக்கலிங்கம்,
செயலாளர்,
வலிகாமம் தெற்கு பிரதேச சபை.

# மணிப்பூரில் இந்தியத் துருப்புக்கள் முன்னேற்றம்

## கிளர்ச்சியாளர்களின் 3 தளங்கள் கைப்பற்றப்பட்டன

(மணிப்பூர்)

இந்தியத் துருப்புக்கள் மிகவும் முக்கியமானதாகக் கருதப்படும் கிளர்ச்சியாளர்களின் மூன்று தளங்களைக் கைப்பற்றியுள்ளார்கள்.

மியன்மார் எல்லைக்கு அருகே இருக்கும் மணிப்பூர் மாநிலத்தில் இயங்குகின்ற பிரதான பிரிவினைவாத கிளர்ச்சிக்குழுவின் தற்காலிக தலைமையகமும் இவற்றில் அடங்குவதாக இராணுவம் அறிவித்திருக்கிறது.

இந்தத் தளங்களிலிருந்து பெருமளவான வெடி பொருட்கள், துப்பாக்கி ரவைகள், கணினி உதிரிப் பாகங்கள் என்பனவும் மீட்கப்பட்டிருக்கின்றன.

இவையனைத்தும் மக்கள் விடுதலைச் சேனை என்ற அமைப்புக்குச் சொந்தமானவையாக இருக்கலாமென்று இராணுவப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இவ் அமைப்பு மணிப்பூர் மாநிலத்திற்கு சுதந்திரம் கோரி ஆயுதப் போராட்டம் நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# காஷ்மீரில் அமைதியை ஏற்படுத்த மத்திய அரசு தீவிர முயற்சி எடுக்கும்

(காஷ்மீர்)

காஷ்மீரில் அமைதியை ஏற்படுத்த தேவைப்பட்டால் யுத்த நிறுத்தத்தை அமுற்படுத்துவது குறித்து இந்திய மத்தியரசு பரிசீலிக்கும் என மத்திய உள்துறையமைச்சர் சிவராஜ் பட்டேல் தெரிவித்துள்ளார்.

காஷ்மீர் மாநிலத்தில் இந்திய பாகிஸ்தான் எல்லையில் வேலி அமைக்கும் பணி நடைபெற்று வருகின்றது. இதனை நேரில் சென்று ஆய்வு நடத்திய மத்திய உள்துறையமைச்சர் சிவராஜ் பட்டேல் ஜம்மு எல்லைப் பகுதிக்குச் சென்று பார்வையிட்டதோடு, எல்லைப் பாதுகாப்பு படையினரையும் சந்தித்துப் பேசியபோதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

எல்லையில் வேலி அமைக்கப்பட்ட பகுதியில் தீவிரவாதிகளின் ஊடுருவல் குறைந்துள்ளதாக் கூறிய சிவராஜ் பட்டேல் எல்லைப்பாதுகாப்புப் படையினருக்கு அனைத்து நவீன ஆயுதங்களும் அளிக்கப்படுமென்றும் கூறினார்.

மேலும் காஷ்மீரில் பயங்கரவாத நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த மத்தியரசு தீவிரமுயற்சிகளை மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

சிவராஜ் பட்டேலுடன் மத்திய அமைச்சர்களான குலாம் றபி ஆசாத் ஜஸ்வங், எஸ்.ரகுபதி காஷ்மீர் மாநில துணைமுதலமைச்சர் ஆகியோரும் சென்றிருந்தனர்.

# பேச்சுவார்த்தைக்கு பிரதிநிதிகளை அனுப்புக அசாம் அரசு தீவிரவாதிகளிடம் கோரிக்கை!

அசாம் மாநில அரசு பேச்சுவார்த்தைகளில் பங்குபற்றுமாறும் இதற்கான தங்களுடைய பிரதிநிதிகளின் பெயர்களை அனுப்பும்படி பொடோ தேசியக்குடியரசு முன்னணியை கேட்டுக்கொண்டுள்ளது.

அவர்களுக்குப் பாதுகாப்பான போக்குவரத்தை வழங்கவும் முன்வந்துள்ளது. இதுவரை என்.டி.எப்.பியுடன் நேரடித்தொடர்பு ஏற்படுத்தப்படவில்லையென்று முதலமைச்சர் தருண் கோபால் செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

அண்மையில் மூத்த என்.டி. எப்.பி. தலைவர் கொலையுண்டதால் அந்த இயக்கம் சண்டை நிறுத்தத்தை திரும்பப் பெறுவதாக தெரிவித்திருந்தது. அத்துடன் அரசு கொலைகுறித்த விசாரணைக்கும் உத்தரவிட்டுள்ளது.

# கூரியத் மாநாட்டின் முடிவிற்காக அரசு காத்திருக்கும் - சிவராஜ் பட்டேல்

(புதுடில்லி)

மத்தியரசுடன் மீண்டும் பேச்சுவார்த்தையினைத் தொடங்குவது என்ற கூரியத் மாநாட்டின் முடிவிற்காக அரசு காத்துக் கொண்டிருக்குமென்று மத்திய உள்துறையமைச்சர் சிவராஜ் பட்டேல் கூறியுள்ளார்.

ஜம்மு விமானத்தில் செய்தியாளர்களுடன் பேசியபோது இவ்வாறு தெரிவித்துள்ளார். மேலும் தெரிவிக்கையில்,

கூரியத் பேச்சுவார்த்தைக்கு முன்வரும் வரை காஷ்மீர் பிரச்சினை குறித்து மற்றைய அரசியல் சமூகக் குழுக்களுடன் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டபிரதிகளுடனும் அரசு ஆலோசித்து வருமென்றார். தீவிரவாதிகளுடனான உடனடி சண்டை நிறுத்தத்தை நிராகரித்த சிவராஜ் பட்டேல் வன்முறை முழுவதையும் ஒடுக்கவும் மாநிலத்தில் இயல்பு நிலையை ஏற்படுத்தவும் அரசு அனைத்து முயற்சிகளையும் தொடரும் என்றும் அவர் மேலும் கூறினார்.

# ஐரோ. யூனியனின் சுற்றுச் சூழல் கொள்கையை இந்தியா ஏற்றுக்கொண்டது

இந்தியா ஐரோப்பிய யூனியனின் சுற்றுச் சூழல் அமைப்பை ஏற்படுத்த வேண்டுமென்ற ஐரோப்பிய கோரிக்கையை இந்தியா ஏற்றுக் கொண்டுள்ளது.

நெதர்லாந்தில் இடம்பெற்ற கூட்டுப் பத்திரிகையாளர் கூட்டத்தில் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் இதனை தெரிவித்துள்ளார்.

புதிதாக அமைக்கப்படவுள்ள எரிசக்திக் குழு மூலமாக அணுசக்தி துறை உட்பட எரிசக்திப் பிரச்சினைகளில் ஐரோப்பியாவுடன் இந்திய ஒத்துழைப்பை இது விரிவுபடுத்துமென்றும் தெரிவிக்கப்படுகின்றது.

# பங்களாதேஷில் பயங்கரவாதிகளின் முகாம்கள்!

## பிரணாப் முகர்ஜி

பங்களாதேஷில் பயங்கரவாதிகளின் முகாம்கள் இருப்பதற்கான நம்பகத்தனமான தகவல் அரசிடம் இருப்பதாக பாதுகாப்பு அமைச்சர் பிரணாப் முகர்ஜி கூறியுள்ளார்.

ஆனால், அப்பகுதியிலிருந்து அதற்கான பதில் நடவடிக்கை ஆக்கபூர்வமாக இல்லையென்றும், இந்த முகாம்கள் பற்றிய விபரம் எல்லாம் பங்களாதேஷிற்கு முன்னரே தெரிவிக்கப்பட்டு விட்டதென்று கூறிய முகர்ஜி, ஆனால், இதற்கான நடவடிக்கையைப் பங்களாதேஷ் இன்னமும் எடுக்கவில்லையென்றும் கூறினார்.

தொலைக்காட்சி ஒன்றுக்கு அவர் அளித்த பேட்டியிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

# இரு தரப்பு வர்த்தகத்திற்கு இந்தியா, ஐரோ. யூனியன் ஒப்புதல்

(புதுடில்லி)

இருதரப்பு வர்த்தகத்திற்கு இடையூறு விளைவிக்கும் அனைத்து இடையூறுகளையும் நீக்கி இந்தியாவும் ஐரோப்பிய யூனியனும் ஒப்புக்கொண்டுள்ளன.

தொழில் நுட்பத்தின் முக்கிய பகுதிகளில் பரஸ்பர நன்மைக்காக இருதரப்பு ஒத்துழைப்பிற்கான புதிய துறைகளையும் ஆராயும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஐரோப்பிய யூனியன் தலைவருடன் நடைபெற்ற கூட்டுப்பத்திரிகையாளர் கூட்டத்திலே இந்தியப் பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தியாவின் வர்த்தகம் மற்றும் முதலீட்டில் பெரும் கூட்டாளியாக ஐரோப்பிய யூனியன் விளங்குவதாகவும் கூறிய பிரதமர் தற்போதைய பொருளாதார மயமாக்கல் பல்வேறு வாய்ப்புக்களை ஏற்படுத்தியுள்ளதாகவும் பிரதமர் மேலும் தெரிவித்துள்ளார்.


# துயர் பகிர்கின்றோம்

தோற்றம்
23 - 09 - 1945



மறைவு
09 - 11 - 2004

அமரர் உயர்திரு

## வேலுப்பிள்ளை-தேவராசா

(பொது சுகாதார வெளிக்கள உத்தியோகத்தர்)

நேற்றையதினம் இவரின் மரணச் செய்தியைக் கேட்டு பெரும் அதிர்ச்சி உற்றதோடு அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

தகவல்:
நலன்புரிச் சங்கம், மலேரியா தடை இயக்கம்,
கிளிநொச்சி.

(5262)



# கேள்வி அறிவித்தல்

## மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்

கீழ் குறிப்பிடப்பட்ட வேலைகளுக்கான அரக்கு முத்திரையிட்ட கேள்விகள் கீழ் குறிப்பிடப்படும் நியமங்களுக்கு அமைய கட்டட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கோரப்படுகின்றன. கேள்விகள் இச் செயலகத்தில் ரூபா750/= மீளளிக்கப்படமுடியாத கட்டணம் செலுத்திப் பெறப்பட்ட கேள்விப்படிவத்தில் இணைப்பிரதிகள் 2004.11.23ஆம் திகதி பிற்பகல் 2.00 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்படிவங்களை 2004.11.09 ஆம் திகதியிலிருந்து 2004.11.20 ஆம் திகதிவரை காலை 9.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணிவரை இவ் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். கேள்விகளை "அரசாங்க அதிபர் மாவட்டச் செயலகம்,யாழ்ப்பாணம்" எனும் முகவரியிட்டு பதிவுத் தபால் மூலம் அல்லது நேரடியாக திட்டப்பணிப்பாளர் அலுவலகத்தில் இதற்கென வைக்கப்பட்டுள்ள பெட்டியில் இடலாம். கேள்விகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிட்ட திட்டத்தின் பெயர்குறிப்பிடவேண்டும். காலதாமதமாக சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. மேலதிக விபரங்களுக்கு மாவட்டச் செயலக புனர்வாழ்வு புனரமைப்பு அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| வேலையின் விபரம் | ஆகக்குறைந்த (ICTAD) தரம் | மீளளிப்பு செய்யப்படக்கூடிய தொகை | மீளளிப்பு செய்ய முடியாத தொகை |
|---|---|---|---|
| தெல்லிப்பளை ப.நோ.கூ. சங்கதலைமை அலுவலகம் புனரமைப்பு | M6 | 70,000/= | 750/= |
| யாழ்ப்பாண ப.நோ.கூ.சங்க களஞ்சியம் புனரமைப்பும் விரிவாக்கமும். | M8 | 12,000/= | 750/= |

செ.பத்மநாதன்,
அரசாங்க அதிபர்,
யாழ். மாவட்டம்.

(சி-10755)

## அவுஸ்திரேலிய கிரிக்கெட் வீரர்கள் சுழற்பந்தை எதிர்கொள்ள சிரமப்படுகின்றனர்

### ஜோன் புக்கானன்



அவுஸ்த்திரேலிய கிரிக்கெட் வீரர்கள் சுழல்பந்து வீச்சை சமாளிக்க இன்னமும் போதியளவில் கற்றுக்கொள்ளவில்லை என்று அவுஸ்திரேலிய பயிற்சியாளர் ஜோன் புக்கானன் தெரிவித்துள்ளார்.

மும்பையில் இந்திய அணியுடன் இடம் பெற்ற கடைசி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் அவுஸ்திரேலிய அணி தோல்வியுற்றது இதற்குச் சரியான உதாரணம் என்று புக்கானன் விளக்கமளித்துள்ளார்.

டுபாயில் நேற்று முன்தினம் வெளியான பரிஸ் டைஸ் பத்திரிகைக்கு அவர் வழங்கிய செவ்வியில் முதல் மூன்று டெஸ்ட்களின் முடிவைப் பார்த்தபோது அவுஸ்திரேலிய வீரர்கள் துடுப்பாட்டத்தில் சிறப்பாக செயற்பட்டனர் என்று நினைத்ததாகவும் ஆனால் கடைசி டெஸ்ட்டில் அந்த எண்ணம் தவறு என்ற நிரூபித்ததாகவும் தெரிவித்துள்ளார்.

## கங்குலியின் தலைமைப் பதவிக்கு ஆபத்து ராவிட்டை நியமிக்க தீவிர முயற்சி



இந்திய கிரிக்கெட் அணியின் தலைமைத்துவம் தொடர்பாக பல்வேறு கருத்துக்கள் முன்வைக் கப்பட்டுள்ளன.

ராகுல் ராவிட்டை இந்திய கிரிக்கெட் அணியின் தலைவராக நியமிப்பது குறித்து கவனம் செலுத் தப்பட்டு வருவதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ராவிட்டின் தலைமைத் துவத்தின் கீழ் மும்பையில் அவுஸ்திரேலிய அணிக்கு எதிராக நடைபெற்ற இறுதி டெஸ்ட் போட்டியில் இந்திய அணி வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை கங்குலியை அணித்தலைவர் பதவியில் இருந்து நீக்குமாறு பல்வேறு தரப்பில் இருந்து அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக அவுஸ். அணியின் முன்னாள் வீரர் மாக்வோ கங்குலியை அணித்தலைவர் பதவியில் இருந்து நீக்குமாறு கருத்து தெரிவித்துள்ளார்.



## நியூசிலாந்துக்கான அவுஸ். சுற்றுலா லீமனா? கிளார்க்கா? தேர்வாளர்கள் போராட்டம்



அவுஸ்திரேலியா எதிர்வரும் மாதங்களில் நியூசிலாந்துக்கான சுற்றுலாவை மேற்கொள்ளவுள்ளது.

இந்தச் சுற்றுலாவில் யாரை விளையாட வைப்பது என்பதில் தேர்வாளர்களுக்குக் கடுமையான சிக்கல்நிலை தோன்றியுள்ளது.

மைக்கல். கிளார்க் மற்றும் டரன்லீமன் ஆகியோருக்கு இடையில் இந்தப்போட்டி நிலவுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே டரன்லீமன் தன்னுடைய நிலையில் இருந்து இறங்கிவிட்டுக் கொடுத்து இன்னுமொரு வீரருக்குத் தன்னுடைய இடத்தை வழங்கியிருந்தார்.ஆனால் மீண்டும் அணியில் இடம்பிடிப்பதற்காக அவர் முயற்சித்து வருகின்ற நிலையில் லீமனையும் இணைக்க வேண்டும் அதேபோன்று கிளார்க் பிரகாசித்து வருவதால் அவரையும் இணைக்க வேண்டும் என்ற நிலையில் தேர்வாளர்களை சிக்கல் நிலைமைக்குள்ளாக்கியுள்ள இதேவேளை அணித்தலைவர் பொண்டிங்கும் கடுமையான சிக்கல் தோன்றியிருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

## சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து களுவிதாரண ஓய்வுபெற்றார்



1996ஆம் ஆண்டு சிறிலங்கா அணி உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றியபோது ஆடுகளத்தை அதிரவைத்து ரசிகர்களை தன்பக்கம் ஈர்த்த அதிரடி ஆட்டக்காரரும், விக்கெட் காப்பாளருமான ரொமேஷ் களுவிதாரண சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

கிரிக்கெட் சபையால் பல தடவை ஓரம் கட்டப்பட்ட களுவிதாரண அதனால் ஏற்பட்ட மனவருத்தமே அவரின் ஓய்விற்கு காரணமாகக் கருதப்பட்டாலும், தொடர்ச்சியாக பிரகாசிக்காதுடன் பாகிஸ்தானுக்கு எதிரான கடைசி டெஸ்ட் போட்டியில் அரைச் சதத்தைப் பெற்றிருந்தார்.

தனது ஓய்வு குறித்து அவர் குறிப்பிடுகையில், ஆரம்பத்தில் தன்னுடைய கிரிக்கெட்டை அவுஸ்திரேலியாவுடனான முதலாவது போட்டியிலேயே சதம் ஆரம்பித்தேன் பெற்றேன். இறுதிப் போட்டியில் அரைச் சதத்துடன் நிறைவு செய்வதில் மகிழ்ச்சி அடைவதாகத் தெரிவித்துள்ளார்.

இது மாத்திரமல்லாது இருபது அல்லது முப்பது தடவைகள் மீண்டும் கிரிக்கெட்டில் நுழைவதற்கு கஷ்டப்பட்டதாகவும், ஆனால், பல தடவை ஓரம்கட்டப்பட்டதாகவும் சுட்டிக் காட்டியுள்ளார்.

இதனைவிட நியூசிலாந்துக்கான இருபது பேர் கொண்ட அணியில் தன்னுடைய பெயர் இணைக்கப்படவில்லை எனத் தெரிவித்துள்ள களு இதுவே எனக்கு ஓய்வுபெறும் தருணம் எனத் தெரிவித்துள்ளார்.

## நியூசிலாந்து செல்லும் சிறிலங்கா அணியில் முத்தையா முரளிதரன் இடம்பெறவில்லை



சிறிலங்கா கிரிக்கெட் அணி இந்த வருட இறுதியில் நியூசிலாந்துக்கான சுற்றுலாவை மேற்கொள்ளவிருக்கிறது. டிசெம்பர் 26ஆம் திகதி ஆரம்பிக்கும் முதலாவது ஒருநாள் போட்டி அடங்கலாக ஐந்து ஒருநாள் போட்டியிலும் இரண்டு டெஸ்ட் போட்டியிலும் சிறிலங்கா அணி நியூசிலாந்து மண்ணில் விளையாடவுள்ளது.

இதற்கான அணியில் இருந்து அனுபவம் வாய்ந்த வீரர்களான அவிஸ்ககுணவர்த்தன, ரொமேஸ் களுவிதாரண ஆகியோர் நீக்கப்பட்டுள்ளனர். இதனைத் தவிர இறுதி டெஸ்ட் போட்டியின் போது அணியில் இணைந்து கொள்ளலாம் என எதிர்பார்க்கப்பட்ட முரளிதரன் அறிவிக்கப்பட்ட 20பேர் கொண்ட குழுவில் இணைக்கப்படவில்லை. அந்த வகையில் தொடர்ந்தும் அணித்தலைவரான மாவன் அத்தப்பத்து, மஹேலஜெயவர்த்தன, சனத்ஜெயசூரிய, குமார்சங்கக்கார, டில்சான், சமிந்தவாஸ், உபுள்சந்தன, நுவண்சொய்சா, டில்காரபெர்னாண்டோ, ரங்கனஹேரத், சமன்ஜெயந்த, திலான் சமரவீர, திலினஹேண்டம்பி, லொக்கு ஆராய்ச்சி, லசித்தமாலிங்க, இயன்டானியல், மஹ்ரூப், நுவன்குலசேகர, கெகான் முபாரக், பிரசன்ன ஜெயவர்த்தன ஆகியோர் இணைக்கப்பட்டுள்ளனர். இருபதுபேர் கொண்ட குழுவில். இறுதியில் 15பேர் கொண்ட குழு தெரிவு செய்யப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. பல இளம் வீரர்கள் அணியில் இடம்பிடித்துள்ளமை சிறப்பம்சம்.

## இந்தியாவுடனான போட்டி பலத்த எதிர்பார்ப்பிற்குரியது

### இன்சமாம்

எதிர்வரும் 13ஆம் திகதி ஈடன்ஹாடன் மைதானத்தில் பாகிஸ்தான் - இந்திய அணிகளுக்கிடையிலான ஒரு நாள் போட்டி மிகப் பலம் பொருந்தியதும் பலத்த எதிர் பார்ப்புக்கு மத்தியிலும் நடைபெற இருப்பதாக பாகிஸ்தான் அணித் தலைவர் இன்சமாம் உல்-ஹக் தெரிவித்துள்ளார்.இந்த கிரிக்கெட் போட்டியைப் பொறுத்து தங்களின் அணி வீரர்கள் அனைவரின் மனதில் இருப் பது கிரிக்கெட்டைத் தவிர வேறு எதுவும் இல்லை எனச் சுட்டிகாட்டியுள்ளார். இந்த மைதானத்தில் இரு அணிக்கும் சார்பான ரசிகர்கள் பலர் இருப்பார்கள் எனவே இப் போட்டி ஒரு நிறைந்த போட்டியாக இருக் கும் எனவும் தெரிவித்துள்ளார்.




## தடை செய்யப்பட்ட கால்பந்து வீரர் ரசிகர்களிடம் மன்னிப்புக் கோரினார்

ஊக்கமருந்து பாவனை குற்றத்துக்காக போட்டிகளிலிருந்து தடைவிதிக்கப்பட்டிருக்கும் ருமேனிய கால் பந்தாட்ட வீரர் அட்ரியன் முத்து கெல்சியா ரசிகர்களிடம் மன்னிப்பைக் கோரியிருக்கிறார். தான் தவறு செய்ததை ஏற்றுக்கொள்வதாகக் கூறிய அவர் யார்தான் தவறு செய்யாதிருக்கிறார்கள் என்று வினாவெழுப்பியுள்ளார். ஆயினும் அவர் தனது கழக உறுப்பினர்களுடன் பயிற்சியிலீடுபடுவதாக பிந்திய செய்திகள் தெரிவிக்கின்றன.

## மீண்டும் களத்தில் டைசன்

முன்னாள் அதிபார குத்துச் சண்டை வீரர் மைக்டைசன் அவுஸ்திரேலியாவில் நடைபெறும் போட்டியொன்றில் பங்கேற்க எண்ணியிருப்பதாக கூறப்படுகிறது.

முன்னாள் உலக சம்பியனும் சிறந்த பயிற்றுனருமான ஜெப்பெனக் தான் அடுத்த வாரம் இங்கிலாந்து சென்று மைக்டைசனை அழைத்துவந்து நியுசிலாந்து வீரர்காலி மீகாமுடன் மோதலில் ஈடுபடுத்த விருப்பதாக தெரிவித்துள்ளார். இது தனக்கு நல்ல ஒரு களமாக இருக்கும் என பெனக் தெரிவித்துள்ளதுடன் அவுஸ்திரேலியா ரசிகர்களுக்கு நல்ல விருந்தாகும் என்றார். டைசன் கடந்த யூலையில் கென்டக்சி வீரர் டனிவில்லியம்ஸ் உடனான போட்டியில் தோல்வியடைந்தார்.

## விண்ணப்பிக்க வேண்டுகோள்

முல்லை. மாவட்டத்தில் மாவீரர் வெற்றிக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டி தொடர்பான கலந்துரையாடல் நேற்று முல்லை மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் கமல் தலைமையில் நடைபெற்றது. எதிர்வரும் 13-11-2004 முல்லை மாவட்ட மட்டத்திலான உதைபந்தாட்டப் போட்டி அம்மாவட்ட மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது. இதுவரை விண்ணப்பிக்காதவர்கள் அந்தந்தப் பகுதி விளையாட்டுத்துறையினரிடம் விண்ணப்பங்களைக் கையளிக்குமாறு முல்லை மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் கேட்டுள்ளார்.(20)

## பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான கிரிக்கெட்போட்டி யாழ். பல்கலை அணி முதல் தடவையாக சம்பியனானது

இலங்கை பல்கலைக்கழகங்களுக்கிடையே இடம் பெற்ற மினி ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டியின் ஒரு அங்கமாக இடம்பெற்ற கிரிக்கெட் போட்டியில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக அணி சம்பியனாக முதல் தடவையாக தெரிவு செய்யப்பட்டுள்ளது.

கொழும்பு பல்கலைக்கழகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட இப் போட்டிகளில் இலங்கையில் உள்ள பன்னிரண்டு பல்கலைக்கழகங்களும் கலந்துகொண்டன.

இறுதிப் போட்டியில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக அணியை எதிர்த்து கொழும்பு பல்கலைக்கழக அணி கொழும்பு பல்கலைக்கழக மைதானத்தில் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் பல்கலைக் கழக அணி 116 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தனர்.

துடுப்பாட்டத்தில் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ரி .யதர்தன் 29 ஓட்டங்களையும் எஸ். தனஸ்காந்தன் 23 ஓட்டங்களையும் , எ.ராஜீபன் 14 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் கொழும்பு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பி. விதாராஜ் 04 விக்கெட்டுக்களையும் எம். மடுவன்தீ 3 விக்கெட்டுக்களையும் கே செனைத் 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கொழும்பு பல்கலைக் கழக அணி 111 ஓட்டங்களுக்குள் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.

கொழும்பு பல்கலைக்கழக அணி சார்பில் என் சுரதி பாலா 53 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்துவீச்சில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணியைச் சேர்ந்த ரி.சுபாஸ்கரன் , ரி. யதர்தன், ரி.சர்வானந் ஆகியோர் தலாஇரண்டு விக்கெட்டுக்களையும் ரி.நொபேசன், அருள்ராஜ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணியினர் 5 ஓட்டங்களினால் கொழும்பு பல்கலைக்கழகத்தை வெற்றிகொண்டு சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டனர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணியினர் முதற் சுற்றில் இடம்பெற்ற மூன்று போட்டிகளிலும் வெற்றி பெற்றனர்.

இராஜரட்டை பல்கலைக் கழகத்திற்கும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கும், இடையே இடம்பெற்ற போட்டியில் இராஜரட்டை பல்கலைக்கழகம் 146 ஓட்டங்களுக்குள் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணியினர் 5 விக்கெட்டுக்களை இழந்து 149 ஓட்டங்களைப் பெற்று 5 விக்கெட்டுக்களினாலும் வெற்றி பெற்றனர்.

கொழும்பு மொரட்டுவ பல்கலைக்கழகத்திற்கும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கும் இடையில் இடம் பெற்ற ஆட்டத்தில் 158 ஓட்டங்களுக்குள் மொரட்டுவைப் பல்கலைக்கழகம் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் 7 விக்கெட்டுக்களை இழந்து 159 ஓட்டங்களைப் பெற்று 3 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றுக் கொண்டனர்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்திற்கும் களனிப் பல்கலைக்கழகத்திற்கும் இடையில் இடம்பெற்ற அரையிறுதி ஆட்டத்தில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 150 ஓட்டங்களைப் பெற்றனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய களனிப் பல்கலைக் கழகம் 130 ஓட்டங்களுக்குள் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணியினர் 20 ஓட்டங்களால் வெற்றி பெற்றனர். (41)

## சிந்தனைக்கு



விடுதலைப் போராட்டம் என்பது மக்கள் போராட்டம் பரந்துபட்ட வெகு சனங்கள் ஒன்று திரண்டு, ஒரு ஐக்கிய தேசமாக எழுச்சி கொண்டு போராட்டத்தில் பங்களித்தால் தான், எமக்கு வெற்றி நிச்சயம்.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 10-11-2004
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் Daily@ eezhanatham. com

# முட்டுக்கட்டை

சமாதான முயற்சிகள் தொடர்பான அரசியல்- இராஜதந்திர நடவடிக்கைகள் சற்றுப்பரபரப்பிற்குள்ளாகியுள்ளன. நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் இலங்கைக்கு விஜயம் செய்வதை முன்னிட்டு இப்பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

இலங்கைக்கு விஜயம் செய்யும் நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜோன்பீற்றர்சன் சிறிலங்கா அரச தரப்பினரையும் விடுதலைப்புலிகளின் தலைமைப்பீடத்தையும் சந்தித்துப் பேச்சுவார்த்தைகள் நடத்தவுள்ளதை அடுத்து இதற்கான முன்னெடுப்புகளும் முனைப்புப் பெற்றவையாக உள்ளன.

இந்த வகையில் நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சூல்ஹெய்ம் ஏற்கனவே கொழும்பு வந்து இவை தொடர்பான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளார். இதேசமயம் விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன்பாலசிங்கம் அவர்களும் லண்டனில் இருந்து வன்னி வந்துசேர்ந்துள்ளார். இவர் தேசியத்தலைவர் பிரபாகரன் அவர்கள், நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜோன்பீற்றர்சன் அவர்களுடனான சந்திப்பின்போது கலந்து கொள்ளவுள்ளார்.

இவ்வாறாக சமாதான முயற்சிகள் தொடர்பான நடவடிக்கைகள் சற்றுப்பரபரப்பிற்கு உள்ளாகி இருப்பினும் நோர்வே வெளிவிவகார அமைச்சரின் இவ்விஜயம் சமாதான முயற்சிகளில் எத்தகைய முன்னேற்றத்தை ஏற்படுத்தும் என்பது கேள்விக்குரியதே.

இது நோர்வே தரப்பினாலும் புரியப்பட்டதொன்றாகவே உள்ளது. இதனை நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் பீற்றர்சன்னும் வெளிப்படுத்தாமலில்லை "இலங்கையில் தடைப்பட்டுள்ள சமாதானப் பேச்சுவார்த்தை விரைவில் மீள ஆரம்பிக்கும் என்பதற்கான எந்தவொரு எதிர்பார்ப்பும் தன்னிடமில்லை" என அவர் தனது அபிப்பிராயத்தை ஏற்கனவே வெளிப்படுத்தியுமுள்ளார்.

ஆனால் ஜோன்பீற்றர்சன் தனது அறிவிப்பை வெளிப்படுத்துவதற்கு முன்பாக இருந்த அற்பசொற்ப நம்பிக்கை கூட தற்பொழுது இல்லாமற் போகும் அளவுக்கே நாட்டின் நிலவரம் உள்ளது. குறிப்பாக சிறிலங்கா சனாதிபதியின் இந்திய விஜயத்தின் பின்னான கூட்டறிக்கையானது சமாதானப் பேச்சுவார்த்தையின் எதிர்காலத்தையே கேள்விக்குள்ளாக்கியுள்ளது.

இக்கூட்டறிக்கையானது "நிர்வாகம் தொடர்பான எந்தவொரு செயற்பாடும் இறுதித்தீர்வு விடயமாக இருத்தல் வேண்டும்"எனக் கூறுவதானது அரசாங்கம் இடைக்கால தன்னாட்சி அதிகார சபை குறித்த பேச்சுவார்த்தை தொடர்பாக கொண்டுள்ள நிலைப்பாடு குறித்துக் கேள்வி எழுப்புவதாகவுள்ளது.

அதாவது இக் கூட்டறிக்கை வாசகங்கள் இடைக்கால நிர்வாகம் பற்றிய பேச்சுவார்த்தைகளை நிராகரிப்பதாக உள்ளது. இது இந்திய- சிறிலங்கா அரசுகளின் இறுதி நேரநிலைப்பாடாகக் கொள்ளப்படின் நோர்வே வெளிவிவகார அமைச்சரின் விஜயத்தின் போது அவர் எதிர்பார்த்ததை விட நிலமை மேலும் மோசமானதாகவே இருப்பதற்கு வாய்ப்புண்டு.

ஏனெனில் இது வரையில் சனாதிபதி சந்திரிகா இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை தொடர்பான பேச்சுவார்த்தையை முற்றாக நிராகரிக்கவில்லை. முன்னுக்குப்பின் முரணாக பேசிவரினும், விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படும் என்றே கூறி வந்துள்ளார். இவரின் இந் நிலைப்பாடு காரணமாக அவரின் கூட்டணிக் கட்சியான ஜே.வி.பி.யினால் அவர் அடிக்கடி விமர்சிக்கப்பட்டும் வந்தார்.

இந்தியத்தரப்பும் சமாதானப் பேச்சுவார்த்தைக்கும், நோர்வேயின் சமாதானமுயற்சிக்கும் தன்னாலான ஒத்துழைப்பு வழங்கப்படும் என்றே கூறிவந்தது. ஆனால் இக் கூட்டறிக்கைகளின் மூலம் சமாதானப் பேச்சுவார்த்தைகளைத் தொடங்குவதற்கு அது முட்டுக்கட்டை ஒன்றைப் போட்டுள்ளது. பேச்சுவார்த்தைக்கு அடிப்படையாகக் கொள்ளப்படவேண்டும் என்ற இடைக்கால நிர்வாக சபையை அது நிராகரிப்பதாய் உள்ளது.

இத்தகைய நிலையில் அதாவது சிறிலங்காவும், இந்தியாவும் சமாதானப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதற்கான புதிய முட்டுக்கட்டைகளைத் தோற்றுவித்துள்ள நிலையில் சமாதானப்பேச்சு வார்த்தைகளில் முன்னேற்றம் என்பதற்கான வாய்ப்புக்கள் மிகவும் அரிதாகவே இருக்கும். அதாவது ஜோன்பீற்றர்சன்னின் எதிர்பார்கைக்கும் மேலாகவே நிலமை பாதகமானதாக உள்ளது. இந்நிலையில் ஜோன்பீற்றர்சன்னின் வருகை, சந்திப்புக்கள் என்பன குறித்து தமிழ் மக்கள் நம்பிக்கை எதுவும் கொள்வதற்கில்லை என்றே கூறலாம்.

# பணி நீக்கப்பட்ட வங்கிப் பணியாளருக்கு ஒப்பந்த அடிப்படையில் நியமனம்

-நிரந்தர நியமனம் வழங்க முடியாதெனவும் அறிவிப்பு-

இடைநிறுத்தப்பட்டுள்ள மக்கள் வங்கிப் பணியாளர்களை மனிதாபிமான அடிப்படையில் மீண்டும் சேவையில் இணைத்துக் கொள்ள தாங்கள் தயாராக இருப்பதாக வடபிராந்திய பிரதேச முகாமையாளர் மு.க.சிவபாத விருதயர் தெரிவித்துள்ளார். எனினும் இவர்களிற்கு நிரந்தரநியமனமெதையும் வழங்க முடியாதெனத் தெரிவித்த அவர், மீள நியமனமும், முகவர்களுடனான ஒப்பந்த அடிப்படையிலேயே இடம்பெறுவதாகவும் மேலும் தெரிவித்தார்.

நீண்டகாலமாக தற்காலிகப் பணியாளர்களாகச் சேவையாற்றி வந்திருந்த வங்கிப் பணியாளர்கள் சிலர் நிரந்தர நியமனம் கோரி மனித உரிமைகள் ஆணைக் குழுவினில் முறைப்பாடு செய்திருந்த வேளையில் அவர்கள் பணியிலிருந்து இடைநிறுத்தப்பட்டிருந்தனர். இது தொடர்பாக ஊடகங்களில் செய்தி வெளியாகியிருந்ததையடுத்து ஊடகவியலாளர் மாநாடொன்றை பிரதேச முகாமையாளர் நேற்றுக்காலை தனது அலுவலகத்தில் கூட்டியிருந்தார்.

"குறித்த பணியாளர்கள் சேவையிலிருந்து இடைநிறுத்தப் பட்டதற்கும் மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு அவர்கள் முறைப்பாடு செய்திருந்தமைக்கும் எந்த விதமான தொடர்புமில்லை. அது ஏதேர்ச்சையாக இடம் பெற்றது எனவும் அவர் கூறினார்.

இதேவேளை கடந்த நான்கு வருடங்களிற்கு மேலாகப் பணியாற்றிய பணியாளர்கள் இடைநிறுத்தப்படுகின்ற நிலையில் அரசியல் செல்வாக்கினால் ஒரு தொகுதி பணியாளர்கள் பின்கதவினூடாகப் பணிக்கமர்த்தப்பட்டுள்ளனரே என ஊடகவியலாளர் ஒருவர்கேள்வியெழுப்பிருந்தார். இந்திய நியமனங்கள் அரசினது பணி பின் பேரில் மக்கள்வங்கி தலை யினால் செய்யப்பட்டிருந்தத கூறியஅவர் இதுதொடர்பில் த எந்த வகையிலும் தொடர்புபட்டிருக்கவில்லையெனவும் கூறினார்.(28)

# பதிவு செய்யாது சிறுவர் இல்லம் நடத்திய 'அன்பு இல்ல' முன்னாள் நிர்வாகிக்கு தண்டனை

(திருகோணமலை)

மாகாண சமூகசேவைத் திணைகளத்தில் பதிவு செய்யாமல் திருகோணமலை நகரில் 'அன்பு இல்லம்' என்ற பெயரில் சிறுவர் இல்லம் ஒன்றை நடத்திய குற்றத்தை ஒப்புக்கொண்டஅன்பு இல்லத்தின் முன்னாள் நிர்வாகி எஸ். சுந்தரலிங்கத்துக்கு திருகோணமலை நீதிவான் எம்.கணேசராசா ஐந்நூறு ரூபா அபராதமும், ஒரு மாத சாதாரண சிறைத்தண்டனையும் விதித்துத் தீர்ப்பளித்தார்.

மாகாண சிறுவர் பராமரிப்புத் திணைக்களம் தாக்கல் செய்த இவ்வழக்கு நேற்று செவ்வாய்க் கிழமை திருகோணமலை நீதிவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது. திணைக்களத்தின் சார்பில் சட்டத்தரணிஅனபுலெப்பை, சட்டத தரணி ஜே.எம்.லாஹிர் ஆஜரானார்கள்.

'அன்பு இல்லம்' என்ற அமைப்பை 13 ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டத்தின் கீழ் அனாதைகள் சட்டத்தை மீறி பதிவு செய்யாமல் நடத்தியது, சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட சிறுவர் நல்லொழுக்க அதிகாரியினால் கோரப்பட்ட இல்லம் பற்றிய விபரங்களைச் சமர்ப்பிக்கத் தவறியது. சிறுவர் திணைக்கள அதிகாரிகளை அவர்களின் கடமைகளைச் செய்யவிடாது தடுத்தது ஆகிய குற்றங்களைப் புரிந்ததாக குற்றப் பத்திரிகையில் காட்டப்பட்டிருந்தது. வழக்குவிசாரணைக்கு எடுத்துக் கொண்ட போது தாம் குற்றவாளி என்று எதிரி ஒப்புக்கொண்டார். அதனை அடுத்து நீதிவான் எம்.கணேசராசா, 500ரூபா அபராதத்துடன் ஒருமாத சாதாரணசிறைத் தண்டனை அனுபவிக்கும்படி உத்தரவிட்டார். சட்டத்தரணி அ. விநாயகமூர்த்தி எதிரி சார்பில் ஆஜரானார். 'அன்புஇல்லம்' நீதிமன்றத்தின் உத்தரவின் மீது தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினால் நிர்வகிக்கப்பட்டுவருவது தெரிந்ததே. (25)

# தேச பிரேமி இயக்கத்தின் கிளைகளை நிறுவ வீரவன்ச-குணவன்ச தேரர் வெளிநாடு பயணம்

(கொழும்பு)

தேசப்பற்றாளர் இயக்கத்தின் கிளைக் ாரியாலங்களை அமைக்கும் பொருட்டு அவ்வியக்கத்தின் தலைவரான ல்லே குணவன்ச தேரரும் ஜே.வி.பி.உறுப்பினர் விமல் வீரவன்சவு வரும் 12ஆம் திகதி வெளிநாடு செல்லவுள்ளனர்.

இவர்கள் இருவரும் வரும் 13ஆம் திகத் ிரான்சிலுள்ள அசோக மண்டபத்தில் புதிய கிளையொன்றைத ிறந்து உரையாற்றவிருக்கின்றனர்.

அடுத்த நாளான 14ஆம் திகதி இலண்டனிலுள்ள அக்ரன் நிலையத்தில் அங்குள்ள சிறிலங்கா வாசிகள்முன் உரையாற்றவுள்ளதுடன் அங்கும் ஒருகிளைக் காரியாலயத்தைத் திறந்து வைக்க விருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதைத்தவிர இத்தாலி, அமெரிக்கா உட்பட மேலும் பல நாடுகளில் வதியும் சிங்களவர்கள் அங்கும்இவ்வாறான அலுவலகங்களைத் திறந்துவைக்குமாறு கோரியுள்ளனர்.

# முஸ்லிம் காங்கிரஸ் தலைவருடன் எரிக்சூல் ஹெய்ம் சந்தித்துப் பேச்சு

நோர்வே விசேட தூதுவர் எரிக் சூல் ஹெய்ம் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமை நேற்றுச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

சமாதானப்பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற் கான தமது கட்சியின் நிலைப்பாட்டை நோர்வேத் தூதுவரிடம் எடுத்துக் கூறியதாக ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார். வட-கிழக்கு யுத்தத்தின்போது முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட பாதிப்புத் தொடர்பாக தயாரிக்கப்பட்ட அறிக்கை ஒன்றையும் நோர்வேத் தூதுவரிடம் ஹக்கீம் கையளித்துள்ளார். இலங்கைக்கான நோர்வேத்தூதுவர் கான்பிறஸ்கரும் இச்சந்திப்பில் கலந்துகொண்டார்.

இச்சந்திப்பின் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய ரவூப் ஹக்கீம், தமிழீழவிடுதலைப் புலிகள் தமது நிலைப்பாட்டை அவ்வப்போது மாற்றி வருகின்றமை குறித்து தாம்மிகுந்த கவலை அடைந்திருப்பதாகவும் தெரிவித்தார். ஒஸ்லோ பிரகடனம் என்பது 2002ஆம் ஆண்டு நவம்பர் மாத இறுதியில் நடைபெற்ற உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தின்போது அந்த நாடுகள் கூட்டாக விடுத்த பிரகடனம் இருக்கிறது. அந்தப் பிரகடனம் ஒஸ்லோ பேச்சுக்களின்போது இரண்டு தரப்புக்களும் விடுத்த பத்திரிகை அறிக்கைக்குப் புறம்பான ஒரு விடயம். இரு தரப்புக்களும் இணங்கிய விடயம் சம்பந்தமாக நோர்வே அரசாங்கம் ஒஸ்லோ பேச்சுக்களின் பின்னர் ஒரு பத்திரிகை அறிக்கையை விடுத்திருந்தனர். அந்தஅறிக்கையில் தான் இந்த இரண்டு தரப்புக்களும் ஐக்கிய இலங்கைக்குள் தமிழ் பேசும் மக்களின் சுயநிர்ணய உரிமையை மதிக்கின்ற அடிப்படையில் சமஷ்டி அடிப்படையிலான ஒரு தீர்வை இலங்கைக்குள் காணுவது என்ற தீர்வை எட்டி இருந்தார்கள். நோர்வே அரசாங்கம் விடுத்த பத்திரிகை அறிக்கை தம்மை கட்டுப்படுத்தாது எனப் புலிகள் கருதுகின்றனர். இது எம்மைப் பொறுத்தவரையில் துரதிஷடவசமானது. முஸ்லிம்களைப்பொறுத்த வரையிலும் இப்படித்தான். புலிகள்முடிவுகளில் பின் வாங்கினர். இது எமக்குக்கவலை தருகின்றது என்றார்.

## அரசியல் ஆலோசகர் அவர்களின் கிளி. வருகையின்போது....







# முன்னாள் அமைச்சர் எஸ்.பி.திசநாயக்க ஊழல் குற்றச்சாட்டில் கைதாகி விடுதலை

லஞ்ச ஊழல் குற்றச்சாட்டின் பேரில் முன்னாள் அமைச்சர் எஸ்.பி.திசநாயக்க லஞ்ச ஊழல் ஆணைக் குழுவினரால் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின் பேரில் நேற்றுப் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

அமைச்சர் பதவி வகித்த காலத்தில் சட்ட விரோதமான முறையில் சொத்துக்களை சேர்த்ததாக இவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இரண்டு கோடி 90 லட்சம் ரூபா பெறுமதியான சொத்துக்களுக்குரிய விபரங்களை இவர் சமர்ப்பிக்க தவறியதாகவும் கூறப்பட்டுள்ளது.

மேல் நீதிமன்றத்தில் இவருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்படவிருப்பதாக லஞ்ச ஊழல் ஆணைக்குழுப் பொலிசார் நீதிமன்றத்தில் நேற்று அறிக்கை சமர்ப்பித்தனர். இதனை ஏற்றுக் கொண்ட நீதிபதி ரூபா 25 லட்சம் ரொக்கம் மற்றும் ஒரு கோடி ரூபா சரீரப் பிணையில் சந்தேக நபரைச் செல்ல அனுமதித்து, மீண்டும் ஜனவரி 27ஆம் திகதி ஆஜராக வேண்டும் என்றும் உத்தரவிட்டார். (32)

## மட்டு.வாழைச்சேனை

# கறுவாக்கேணி மைதானமருகே இளைஞர் மீது துப்பாக்கிச் சூடு

மட்டக்களப்பு வாழைச்சேனை கறுவாக்கேணிபொது விளையாட்டு மைதானத்திற்கருகாமையில் இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இளைஞர்ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்றுக்காலை 8.30மணியளவில் இடம் பெற்றுள்ளது. உந்துருளியில் வந்த இரண்டுஇனந் தெரியாதோர்.ரி56ரக கைத்துப்பாக்கியினால் சுட்டுவிட்டு தப்பிச்சென்றுள்ளனர்.

வயிற்றிலும், மார்புப் பகுதியிலும் துப்பாக்கிச் சூடு காணப்படுகிறது. இந்த இளைஞர் வாழைச்சேனை மாவட்ட வைத் தியசாலையில் அனுமதிக்கப்பட்டு தற்போது ஆபத்தான நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப்பிரிவில் அனுதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரனைகளை வாழைச்சேனை பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர். இவ்வாறு துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானவர் 27 வயதுடைய கோபாலன் புதனிதராஜ எனஅடையாளம்காணப்பட்டுள்ளார்.

## கலந்துரையாடல்

(முள்ளியவளை)

முள்ளியவளைப்பிரதேச உழவு இயந்திர உரிமையாளர் சங்க விசேட கலந்துரையாடல் இன்று பி.ப.3.30 மணிக்கு முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளதால் மேற்படி கலந்துரையாடலில் பிரதேசத்திற்குட்பட்ட சகல உழவு இயந்திர உரிமையாளர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு முள்ளியவளைப்பிரதேச தொழிற்சங்க இணைப்பாளர் ந.சிவா கேட்டுள்ளார்.

மேற்படி கலந்துரையாடலில் துறைசார்ந்த பொறுப்பாளர்கள் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

# கிளியில் உந்துருளி விபத்தில் ஒரே குடும்பத்தில் மூவர் காயம்

(அலுவலக செய்தியாளர்)

உந்துருளி ஒன்றின் மீது பின்னால் சென்ற உந்துருளி மோதியதில் பின்னால் சென்ற உந்துருளியில் பயணித்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் படுகாயங்களுக்குள்ளான நிலையில் கிளி. மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மேற்படி சம்பவம் நேற்றுப் பிற்பகல் 3.30 மணியளவில் டிப்போ கோணாவில் வீதியில் இடம்பெற்றுள்ளது.

முன்னால் சென்றுகொண்டிருந்த உந்துருளியினை முந்துவதற்கு எத்தணித்தபொழுதிலேயே மேற்படி விபத்து இடம்பெற்றுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

மேற்படி விபத்துக் குறித்து தமிழீழ வீதிப் போக்குவரத்து காவல் துறையினர் விசாரணையினை மேற்கொண்டு வருகின்றனர்.

அம்பாள்குளத்தைச் சேர்ந்த இ. கணேசமூர்த்தி (வயது - 40), அவரது மனைவி க. பத்மாவதி (வயது - 31),மகள் க. விதுசா (வயது-9) ஆகிய மூவருமே மேற்படி சம்பவத்தில் காயமடைந்து சிகிச்சை பெற்று வருபவர்களாவர். (சோ, ச)

## கன்ரர்...

சென்று கொண்டிருந்த பொழுது எதிரே அதிவேகமாக வந்த கன்ரர் வாகனம் மேற்படி துவிச்சக்கர வண்டியை மோதியதன் விளைவாக துவிச்சக்கர வண்டியும், துவிச்சக்கர வண்டியில் பயணித்த பெண்ணும் கன்ரர் ரகவாகனத்தினால் வீதி அருகிலிருந்த பள்ளத்திற்குள் இழுத்துச் செல்லப்பட்டு மரக்கட்டையில் மோதி நிறுத்தப்பட்டுள்ள போதிலும் , மேற்படி பெண் வாகனத்திற்குள் சிக்குண்ட நிலையில் இருக்கக் காணப்பட்டதாக தெரியவந்துள்ளது.

அவ்விடத்திற்கு வந்தவர்களின் உதவியுடன் வாகனத்தின்கீழ் சிக்குண்டு காயத்திற்குள்ளான நிலையிலிருந்த பெண் பலத்த பிரயத்தனத்திற்கு மத்தியில் மீட், கப்பட்டு கிளி.மாவட்ட வைத்திய சாலைக்கு எடுத்து வரும் வழியில் சாவடைந்துள்ளார் என தெரிய வந்துள்ளது.

ஸ்தலத்திற்கு விரைந்த தமிழீழ வீதிப்போக்குவரத்துப் பிரிவு காவல்துறையினர் பள்ளத்தில் பாய்ந்த கன்டர் வாகனத்தை மீட்டு காவல்பணிமனைக்கு எடுத்துவந்துள்ளதுடன், சாரதியினையும் தடுத்து வைத்து விபத்துக் குறித்து விசாரணையயினை மேற்கொண்டு வருகின்றனர்.

முரசு மோட்டை மூன்றாம் கட்டையைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தாயான த.சிவாநந்தி (வயது -29) என்ற பெண்ணே மேற்படி சம்பவத்தில் மரணமானவர் என்பது குறிப்பிடத்தக்கது. (சோ)

## அதிகளவு....

நாட்டில் அதிகளவான ஊழல்களைப் புரியும் நிறுவனங்களாகும். இதனை நான் கூறாமல் தவிர்த்தால வேறு எவரும் கூறமாட்டார்கள்.

என்னை எவரும் எவ்வாறு தூசித்தாலும் பரவாயில்லை. இந்த நாட்டை அபிவிருத்திப் பாதையில் கொண்டு செல்வதற்காகவே நான் இந்த உண்மையைச் சொல்கிறேன். பத்திரிகைகள்தான் எவ்வாறு தவறாகப் பிரச்சாரம் செய்வதாக பொலிஸ் அதிகாரிகள் கூறுகிறார்கள்.

குற்றங்களைத்தடுக்க வேண்டிய பொலிசார் தமது கடமையைச் சரியாகச் செய்வது குறைவடைந்து விட்டது. பொலிசாரால் பிரச்சினைகளைத் தீர்ப்பதே பெரும் பிரச்சினையாகிவிட்டது. இவற்றிற்கான சரியான தண்டனைகளை நீதிமன்றங்கள் சரியாக வழங்குவதில்லை. இதுவும் குற்றங்கள் அதிகரிப்பதற்கு முக்கியமான காரணமாக அமைகிறது. முழுச்சட்டத்துறையுமே மோசடி நிறைந்ததாக இருக்கிறது என இங்கிருக்கும் சட்டமா அதிபர் கூறுகிறார். இதனை மறைப்பதில் எவ்வித நன்மையும் இல்லை. எமது அமைச்சர்களோ, பாராளுமன்ற உறுப்பினர்களோ தவறு செய்திருந்தால் அவர்களை ஏன் விசாரிக்கவில்லையென பொலிஸ்மா அதிபரைக் கேட்பேன்.

அரசியல் வாதிகளின் பின்னால் தமது பதவி உயர்வுகளை மட்டும் குறிக்கோளாகக் கொண்டு செயற்படுபவர்களால் நாட்டில் அமைதியையும் ஒழுங்கையும் நிலைநாட்ட முடியாது. இதற்கு கொலை செய்யவும் தயங்குவதில்லை. இந்தத் துறையைச் சேர்ந்தவர்களுக்கு மூன்று ஆண்டுகளின் முன்னர் தீமானிக்கப்பட்ட சம்பளத்தை வழங்குவதற்காகப் பேச்சு நடத்தி வருகிறோம் அது கடந்த அரசால் நிறுத்தப்பட்டது என அவர் மேலும் கூறினார்.

## எரிக்....

சனாதிபதியைப் பொறுத்தவரையில் தமிழீழ விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைக்கு வரு கின்றார்கள் இல்லை என்றும், அவர்களைப் பேச்சுவார்த்தை மேசைக்குக் கொண்டுவரும் முயற்சிகளில் தான் ஈடுபட்டுவருவதாகவும், விரைவில் அவர்கள் பேச்சுவார்த்தைக்கு வருவார்கள் என்ற தொனியிலும் அவர் கருத்து வெளியிட்டு வருகிறார். இது ஒரு பொய்யான விடயம். ஆனால் இந்த விடயத்தை அவர் சர்வதேச சமூகத்திற்கும் எடுத்துக்கூறுகிறார்.

சனாதிபதியைப் பொறுத்தவரையில் எங்களுக்கு அதிகமான ஐயப்பாடுகள் இருக்கிறது. ஏனெனில் அவரின் நிகழ்ச்சிநிரல் வித்தியாசமானது. அந்த விடயங்களைப் பொறுத்தவரையில் சனாதிபதி தான் எப்படி தொடர்ந்தும் பதவியில் இருப்பது. அப்படி அதிகாரத்தில் இருப்பதாக இருந்தால் அரசியல் சாசனத்தில் எத்தகைய மாற்றங்கள் செய்யப்பட வேண்டும். அரசியல் சாசனத்தில் மாற்றங்கள் செய்வதற்கு ஜே.வி.பி. போன்ற அவரது கூட்டுக்கட்சிகளின் ஆதரவு தேவை. இந்நிலையில் சனாதிபதி தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்துவதாக இருந்தால் ஜே.வி.பி. அவர்களை விட்டு வெளியேறும் என்ற ஒரு மிரட்டலும் உள்ளது. இந்தநிலையில் அவர் தொடர்ந்தும் பதவியில் இருப்பது என்ற அடிப்படையில் சனாதிபதி இருக்கின்ற நிலையில் நேர்மையாகவும், உண்மையாகவும் அவர் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவாரா என்ற கேள்வி தமிழ் மக்கள் மத்தியில் இருக்கிறது என்பதையும் எரிக்சூல்கெய்மிடம் எடுத்துக் கூறியிருக்கிறோம். இப்பொழுது வரப்போகின்ற வரவு-செலவுத் திட்டத்தில் துண்டுவிழும் தொகையை நிரப்ப அவர்களுக்கு நிதியுதவி தேவை. இந்த நிலையில் நாங்கள் பேச்சுவார்த்தைக்குப் போகின்றோம், பேசுவோம் என்ற கதைகள் நடைபெறுகின்றன. ஆனால் உண்மையாகப் பேச்சுவார்த்தைக்குரிய வேலைகள் நடைபெறுகிறதா என்பது கேள்விக்குரிய விடயமாகவுள்ளது.

தமிழர் தரப்பைப் பொறுத்தவரை மிகத்துல்லியமாகவும், தெளிவாகவும், கூறியிருக்கிறோம். என்னவென்றால் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை என்ற அடிப்படையில் பேச்சு நடத்துவதற்கு தமிழீழ விடுதலைப்புலிகள் தயாராக இருக்கின்றனர்.

சனாதிபதி சர்வதேச சமூகத்திற்கு பொய்யான தகவலைக் கூறி அவர்களைத் தவறான பாதையில் இட்டுச்செல்வதாக எமக்குத் தோன்றுகின்றது என்ற விடயத்தையும் அவர்களிடம் கூறியிருக்கிறோம். இப்படியான அரசைப் பேச்சுக்குக் கொண்டுவருவதானால் அரசுமீது பாரிய அழுத்தங்களைக் கொடுக்க வேண்டும். அழுத்தம் போதாமல் இருக்குமானால் ஒருபோதும் அவர்கள் பேச்சுக்கு வரமாட்டார்கள் என்பதையும் கூறினோம் என்றார்.

## லெப்.கேணல்....

அரசியல் துறையினர் அனுசரனையுடன் பி.ப. 4.30 மணிக்கு நடைபெறவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (20)

## களவாக....

கொண்டுள்ளதுடன் உரிய இடத்திற் குச் சென்று விசாரணைகளை மேற்கொண்ட மல்லாகம் நீதிமன்றின் நீதிபதி எஸ்வசந்தசேனன சடலத்தைப் பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லும்படி கட்டளையிட்டுள்ளார். (41,28)

## ஊர்திகளைப்....

டையை தம் வசம் வைத்திருக்க வேண்டும்என்பதனைத் தெரிவித்து சோதனை நிலையத்திற்கு செல்லும் போது நடப்பு ஆண்டுக்கான வரியட்டையினை எடுத்துச் செல்ல வேண்டும் என மோட்டார் ஊர்திப் பதிவுப்பகுதி போக்குவரத்துக் கண்காணிப்புப்பிரிவினர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.(சோ)

## அரசியல்....

பொறுப்பாளர் தமிழினி, காவல் துறைத் துணைப் பொறுப்பாளர் மாதவன் உள்ளிட்ட பலர் வரவேற்றனர். கால நிலை சீரின்மை காரணமாக அன்ரன் பாலசிங்கம் அவர்கள் குறித்த நேரத்திற்கு வந்தடைய முடி யாத நிலை ஏற்பட்டது. இதே வேளை, அரசியல் ஆலோசகர் அவர்கள் செய்தியாளர்களிடம் கருத்துக்கள் எதையும் கூற வில்லை. (லோ, தீ)

## சாவு அறிவித்தல்

### திருமதி தர்மஇரத்தினம்-சிவாநந்தி

முரசுமோட்டை முதலாம் யூனிற்றைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி கந்தையா பஞ்சாச்சரத்தின் (இரத்தினம்) மகளும், முன்னைநாள் அம்பாள் ஸ்ரோர்ஸ் அக்கராயன் உரிமையாளர் நாகரத்தினம் தர்மரத்தினத்தின் (ராசன்) அன்பு மனைவியுமான சிவானந்தி (ஆனந்தி) என்பவர் 09.11.2004 அன்று அகாலச் சாவடைந்துவிட்டார். இவர் துவிர்சன், சோபிகா, தனுசியன் ஆகியோரின் அன்பு தாயாருமாவர். அன்னாரின் இறுதிக் கிரிகைகள் 10.11.2004 புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் இடம் பெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் முரசுமோட்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

முரசுமோட்டை,
பரந்தன். (5265)

தகவல்:-
மாமி-க.மகேஸ்வரி

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 10 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.